بسم اللہ الرحمن الرحیم نحمدہ ونصلی علی رسولہ الکریم وعلی عبدہ المسیح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنتُمْ أَذِلَّةٌ

தொகுதி 4
வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்
வார இதழ் - காதியான்
Weekly BADAR Qadian TAMIL

இதழ் 21
ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது
துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

17 ரமஜான் 1440 ஹிஜ்ரி கமரி 23 ஹிஜ்ரத் 1398 ஹிஜ்ரி ஷம்ஸி
23 மே 2019

## அல்லாஹ்வின் கட்டளை

اَفَغَيْرَ دِيْنِ اللّٰهِ يَبْغُوْنَ
وَلَهٗۤ اَسْلَمَ مَنْ
فِى السَّمٰوٰتِ وَالْاَرْضِ
طَوْعًا وَّكَرْهًا وَّاِلَيْهِ يُرْجَعُوْنَ ○

வானங்களிலும், பூமியிலும் உள்ளவர்கள் விருப்புடனோ, வெறுப்புடனோ அவனுக்கே கட்டுப்பட்டு நடக்கும் பொழுது, அல்லாஹ்வின் மார்க்கம் அல்லாததை இவர்கள் விரும்புகின்றனரா? அவனிடமே இவர்கள் திரும்பக் கொண்டு செல்லப்படுவார்கள். (3:84)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## 124 -வது காதியான் ஆண்டு மாநாடு 2018 பற்றிய சுருக்கமான அறிக்கை (மாநாடு துவக்கப்பட்டதிலிருந்து இது 127 -வது வருடமாகும்)

## அஹ்மதிய்யத்தின் தலைமையகமான காதியான் தாருல் அமானில் 124 -வது அருளுக்குரிய ஆண்டு மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பு மற்றும் நேசத்தின் தகுதியை வேறு எவராலும் அடைய முடியாது. அன்னாரது ஒவ்வொரு சொல்லும் அல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பில் தம்மை மாய்த்ததற்கான ஆதாரமாகும்**

**இந்தக் கடைசி நாளையும் ஸலவாத்தைக் கொண்டு நிரப்புங்கள். மேலும் புதிய ஆண்டையும் ஸலவாத்தைக் கொண்டு ஆரம்பம் செய்யுங்கள். இதன் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது இருப்போடு தொடர்புடைய அந்த அருட்களை விரைவாக நாம் பெறக் கூடியவர்களாக ஆக வேண்டும்**

**முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா மூலமாக ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள், மாநாட்டில் பங்கு பெற்றவர்களின் அகப்பார்வைக்கு எழுச்சியூட்டக்கூடிய நிறைவுரையை நிகழ்த்தினார்கள்**

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

### பைத்துத் துஆவில் நஃபிலான தொழுகைகளை நிறைவேற்றுதல் மற்றும் காதியானிலுள்ள புனித இடங்களுக்கு செல்லுதல்

ஒவ்வொரு வருடத்தைப் போன்றும் இந்த வருடமும் இந்தியாவிலிருந்தும் ஏனைய நாடுகளிலிருந்தும் வந்திருந்த கண்ணியத்திற்குரிய விருந்தினர்களுக்காக முறையான கட்டுக்கோப்பான வழிமுறைகளைப் பேணியவாறு அவர்கள் பைத்துத் துஆவில் நஃபிலான தொழுகைகளை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

விருந்தினர்கள் மிகவும் இன்பத்துடனும் ஆர்வத்துடனும் பைத்துத் துஆவில் நஃபிலான தொழுகைகளை நிறைவேற்றுவதற்காக வெகுநேரம் வரை நீண்ட வரிசைகளில் தமது முறை வரும் வரை காத்திருந்தனர். இந்த நேரத்தில் இறைவனை திக்ர் செய்வதில் அவர்கள் ஈடுபட்டிருந்தனர். விருந்தினர்கள் ஒருமுறை மட்டுமே பைத்துதுஆ செல்வதற்கான வாய்ப்பு கிடைத்தது. அதனை அவர்கள் மிகப்பெரும் நற்பேறாகக் கருதினர்.

இவ்வாறே ஏனைய புனித இடங்களான மஸ்ஜிது முபாரக், மஸ்ஜிது அக்ஸா, மினாரத்துல் மஸீஹ், அத்தார் (தாருல் மஸீஹ்) மற்றும் பெஹஸ்தி மக்பராவில் விருந்தினர்கள் அதிகமாக வருகை தந்து அவற்றைக் கண்டு பயன் பெற்றனர்.

குறிப்பாக அத்தாரில் இருக்கின்ற ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள், ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) ஆகியோர் பயன்படுத்தியிருந்த அருளுக்குரிய பொருள்களை விருந்தினர்கள் மிகுந்த பற்றுடன் பார்வையிட்டனர். பைத்துத் துஆவில் நஃபிலான தொழுகைகளை நிறைவேற்றுவதற்கும் அத்தாரில் இருக்கின்ற அருளுக்குரிய பொருள்களைப் பார்ப்பதற்காகவும் ஆண்களுக்கும் பெண்களுக்குமென்று தனித்தனி நேரங்கள் நிர்ணயிக்கப்பட்டிருந்தன.

இவ்வாறே லங்கர் கானா மற்றும் தங்குமிடங்களில் பணி செய்யக்கூடியவர்களுக்கு வேலைப்பளு அதிகமாக இருப்பதனால் ஹுஸூர் அவர்களின் வழிகாட்டலுக்கேற்ப அவர்களுக்காக ஜமாஅத்தாக தொழுவதற்கான ஏற்பாடும் செய்யப்பட்டது.

மாநாட்டின் நாட்களில் ஹுஸூர் அவர்களின் குத்பா பேருரை காதியானிலுள்ள அனைத்து பள்ளிவாசல்களிலும் பார்ப்பதற்கும், கேட்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. டிசம்பர் 28 அன்று ஹுஸூர் அவர்கள் நிகழ்த்திய குத்பா பேருரையை மஜ்ஸிது தாருல் அன்வாரில் புரஜ்டர் மூலமாக காட்டுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டது. அவ்வாறே பெண்களுக்கு சிராயே தாஹிரில் ஏற்பாடு செய்யப்பட்டது.

### மொழிபெயர்ப்பு துறை

இந்த வருடம் காதியான் ஆண்டு மாநாடு 2018 –ன் போது கீழ்க்காணும் 9 மொழிகளில் ஆண்டு மாநாட்டின் சொற்பொழிவுகளும் மற்றும் எல்லா நிகழ்ச்சியையும் உடனுக்குடன் மொழியாக்கம் செய்வதற்கான ஏற்பாடு இருந்தது.

அரபி, ரஷ்யன், இந்தோனேஷியன், ஆங்கிலம், மலையாளம், தமிழ், தெலுங்கு, வங்காளம், கன்னடம் போன்றவை. அல்லாஹ்வின் அருளாலும் கருணையாலும் எல்லா மொழிகளின் மொழிபெயர்ப்பாளர்களும் சிறந்த முறையில் மொழிபெயர்க்கும் கடமையை நிறைவேற்றினர். ஆண்டு மாநாட்டின் அனைத்து நிகழ்ச்சிகளும் குறிப்பாக ஹுஸூர் அவர்களின் நிறைவுரையும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள 9 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டன. அதிகமான எண்ணிக்கையில் ஆண்களும் பெண்களும்

*(தொடர்ச்சி 9 வது பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் உறங்கவும் செய்கின்றேன். தொழவும் செய்கின்றேன். நோன்பும் வைக்கின்றேன். மேலும் திருமணமும் செய்து கொள்கின்றேன். உஸ்மானே! நீர் அல்லாஹ்விற்கு அஞ்சுவீராக. உங்கள் மனைவி மக்களுக்கு உங்கள் மீது உரிமை இருக்கின்றது... ஆக சில நேரங்களில் நோன்பும் வைப்பீராக. அதனை விடவும் செய்வீராக. தொழுகையையும் நிறைவேற்றுவீராக. மேலும் உறங்கவும் செய்வீராக.**

**எந்த மனிதரை அபூபக்ர் ஏற்றுக் கொண்டாரோ அவர் எவ்வாறு பொய்யராக இருக்க முடியும்? நீங்கள் அபூபக்ரைப் பாராட்டுகிறீர்கள். பிறகு அபூபக்ர் ஒருவரை ஏற்றுக் கொண்டார் எனில் அவரும் கூட புகழத்தக்கவராகவே இருப்பார். அபூபக்ர் தன்னலமற்றவர் எனில் அவர் ஒரு பேராசை பிடித்தவரை ஏன் ஒப்புக் கொண்டார்? உள்ளபடியே அவர் (அபூபக்ர்) தன்னலமற்றவர் எனில் பிறகு அவரது எஜமானரும் தன்னலமற்றவர் என்று ஏற்றுக் கொள்ள வேண்டியதே வரும். இது மறுக்க முடியாத ஓர் ஆதாரமாகும்**

**ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எனது உள்ளத்தில் ஈமான் வலுப்பெற்றது. மேலும் எனக்கு முஹம்மது (ஸல்) அவர்கள் மீது அன்பு ஏற்பட்டது**

**அந்தக் காலத்தில் தல்ஹா, ஸுமைர், உமர், ஹம்ஸா, உஸ்மான் பின் மஸ்வூன் ஆகியோர் அன்னாருடன் இருந்தார்கள். இவர்கள் அனைவரும் அன்னாரிடம் தம்மை அர்ப்பணித்திருந்தார்கள். இவர்கள் அனைவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வியர்வைக்கு பதில் தமது இரத்தத்தை சிந்த தயாராக இருந்தார்கள். 13 வருடங்கள் வரை துன்பங்கள் தொல்லைகள் தொடர்ந்தன என்பதில் எந்த ஐயமும் இல்லை. கஷ்டங்களை ஏற்றுக் கொள்ள வேண்டியது வந்தது**

**மிகவும் வியக்கத்தக்க விஷயம் என்னவெனில், ஆரம்பத்தில் இடம் பெயர்ந்தவர்களில் அதிகமானவர்கள் குறைஷிகளின் சக்தி வாய்ந்த கோத்திரத்தைச் சார்ந்தவர்களாக இருந்தனர். இதிலிருந்து இரு விஷயங்கள் தெரிய வருகின்றன. ஒன்று, நல்ல ஆற்றலுள்ள கோத்திரத்தைச் சார்ந்தவர்களும் கூட எதிரிகளின் அநீதியிலிருந்து பாதுகாப்பாக இருக்கவில்லை. இரண்டாவது, பலவீனமானவர்கள், அடிமைகள் போன்றோர் மிகவும் பலவீனமாக திக்கற்றவர்களாக இருந்ததால் அவர்களுக்கு இடம்பெயரவும் சக்தி இருக்கவில்லை**

**முஸ்லிம்கள் ஒருவர் மற்றவரின் இரத்தத்தைக் குடிக்க தாகித்தவர்களாக இருக்கின்றனர். மேலும் இந்த சுவருக்குப் பின்னால் அவர்கள் வர விரும்பவில்லை. எனவே தான் குழப்பம் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக அல்லாஹ் இக்காலத்தில் ஏற்படுத்திய அந்த கேடயத்திற்குப் பின்னால் அஹ்மதிகளாகிய நம்மையும் அல்லாஹ் பாதுகாப்பாக வைப்பானாக. மேலும் நாம் இந்த சுவருக்குப் பின்னால் இருப்போமாக**

**விசுவாசம் மற்றும் கலப்பதற்றத் தன்மையில் சிறந்து விளங்கிய ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 19 ஏப்ரல் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **ஷஹாதத்** மாதம் **19 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

இன்று நான் கூறவிருக்கிற பத்ர் சஹாபியின் பெயர் **உஸ்மான் பின் மஸ்வூன் *(ரலி)*** ஆகும். இவரது சுட்டுப்பெயர் அபூ ஸாயிப் ஆகும். ஹஸ்ரத் உஸ்மான் உடைய தாயார் பெயர் துஹைலா பின்த் அன்ஹஸ் ஆகும். ஹஸ்ரத் உஸ்மான் மற்றும் அவரது சகோதரர் குதாமா ஆகியோர் ஒரே உருவத் தோற்றத்தில் இருந்தனர். இவர்கள் மக்கத்து குறைஷிகளின் பனூ ஜமஆ கோத்திரத்தைச் சார்ந்தவர்.

ஹஸ்ரத் உஸ்மான் பின் மஸ்வூன் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட சம்பவம் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) மூலம் அறிவிக்கப்படுகிறது. ஒருமுறை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது வீட்டின் வளாகத்திற்கு வந்தார்கள். அங்கு உஸ்மான் பின் மஸ்வூன் கடந்து சென்று கொண்டிருந்தார். அவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பார்த்து புன்னகைத்தார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அவரிடம் நீர் அமர மாட்டீரா? என்று கூறினார்கள். அதற்கு அவர், ஏன் மாட்டேன்? என்று கேட்டு விட்டு முன்னால் வந்து அமர்ந்தார். அவரிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். திடீரென்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது பார்வையை உயர்த்தி ஒரு சில கணங்கள் வானத்தைப் பார்த்தார்கள்.

பிறகு சிறிது சிறிதாக கீழ்நோக்கி திரும்பினார்கள். அப்படியே தமது வலது பக்கம் பார்த்தார்கள். தம்முடன் அமர்ந்திருந்த உஸ்மானிடமிருந்து முகத்தை விட்டு மற்ற பக்கம் பார்வையைத் திருப்பினார்கள். தமது தலையை குனிந்து கொண்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அப்போது தமது தலையை ஆட்டினார்கள். தாம் ஒரு கருத்தைப் புரிந்த கொண்டது போன்று செய்தார்கள். அருகிலிருந்த உஸ்மான் பின் மஸ்வூன் அதனைப் பார்த்தார்கள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்நிலையை விட்டு மாறியதும் அன்னார் குறித்து ஹஸ்ரத் உஸ்மானுக்கு எதுவும் தெரியாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்மிடம் கூறப்பட்டதைப் புரிந்து கொண்டது போன்று இருந்தார்கள். பிறகு அன்னார் வானத்தின் பக்கம் தலையை உயர்த்தினார்கள். முதலில் செய்தது போன்றே செய்தார்கள். அவர்கள் எதனைப் பார்த்துக் கொண்டிருந்தார்களோ அது வானத்தை நோக்கிச் சென்று விட்டது போன்று இருந்தது. பிறகு

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னரைப் போன்று ஹஸ்ரத் உஸ்மான் பின் மஸ்வூன் பக்கம் திரும்பினார்கள். உஸ்மான், எதற்காக உங்களிடம் வந்து நான் அமர வேண்டும்? என்று கேட்டார்கள். மேலும் ஹஸ்ரத் உஸ்மான், இன்று நீங்கள் என்ன செய்தீர்களோ அதனை நான் முன்னர் செய்யக் கண்டதில்லை என்று கூறினார்.

அவர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இந்தக் கேள்வியைக் கேட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீங்கள் என்ன செய்யக் கண்டீர்கள்? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் உஸ்மான் பின் மஸ்வூன், நான் பார்த்தேன். உங்கள் பார்வை வானத்தை நோக்கிச் சென்றது. பிறகு வலது புறம் பார்த்தீர்கள். பிறகு என்னை விட்டு விட்டு அதன் பக்கம் கவனம் திருப்பினீர்கள்.

பிறகு நீங்கள் உங்கள் தலையை ஆட்டினீர்கள். ஏதோ உங்களிடம் கூறப்பட்டு அதனை நீங்கள் புரிந்து கொள்ள முயற்சிப்பது போன்று இருந்தது என்று கூறினார். அவரிடம், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உள்ளபடியே நீர் அவ்வாறு நடைபெறுவதாக உணர்ந்தீரா? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் உஸ்மான் பின் மஸ்வூன், ஆம்; ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இப்போது என்னிடம் ஒரு தூதுவர் தூதுச் செய்தியைக் கொண்டு வந்தார். என் அருகில் அமர்ந்திருந்தார் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான், அல்லாஹ்வின் தூதுவரா? என்று கேட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஆம் என்று கூறினார்கள். பிறகு ஹஸ்ரத் உஸ்மான், அவர் உங்களிடம் என்ன கூறினார்? என்று கேட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

இன்னல்லாஹ யஃமுரு பில் அத்லி வல் இஹ்ஸானி வஇதாயிதில் குர்பா வயன்ஹா அனில் பஹ்ஷாயி வல் முன்கரி வல்பகி. யஃளுகும் லஅல்ல(க்)கும் தஸக்கரூன்.

நிச்சயமாக அல்லாஹ் நீதி, கருணை மற்றும் நெருங்கிய உறவினர்களுக்கு செய்யப்படுவது போன்று கருணையை செய்யுமாறு கட்டளை இடுகிறான். வெட்கக் கேடானதும், விரும்பத்தகாததும், கிளர்ச்சியானதுமான விஷயங்களிலிருந்து தடுக்கின்றான். நீங்கள் படிப்பினை பெறுவதற்காக நற்போதனை செய்கிறான் என்று அவர் கூறினார். ஹஸ்ரத் உஸ்மான் பின் மஸ்வூன், அந்நேரத்தில் என் உள்ளத்தில் ஈமான் உறுதியாக பதிந்து விட்டது. எனக்கு ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் மீது அன்பு ஏற்பட்டு விட்டது என்று கூறினார்.

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 1 பக்கம் 807, முஸ்னத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் ஹதீஸ் எண் 2921 – 1998– ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள ஆலிமில் குதுபில் அச்சடிக்கப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய நுபுவ்வத் அறிவிப்பிற்குப் பிறகு ஆரம்ப காலத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளை குறிப்பிட்டவாறு கூறினார்கள்: அந்தக் காலத்தில் தல்ஹா, ஸுபைர், உமர், ஹம்ஸா, உஸ்மான் பின் மஸ்வூன் ஆகியோர் அன்னாருடன் இருந்தார்கள். இவர்கள் அனைவரும் அன்னாரிடம் தம்மை அர்ப்பணித்திருந்தார்கள். இவர்கள் அனைவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வியர்வைக்குப் பதில் தமது இரத்தத்தை சிந்த தயாராக இருந்தார்கள்.

13 வருடங்கள் வரை துன்பங்கள் தொல்லைகள் தொடர்ந்தன என்பதில் எந்த ஐயமும் இல்லை. கஷ்டங்களை ஏற்றுக் கொள்ள வேண்டியது வந்தது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த மக்காவிலுள்ள அறிவுள்ளவர்கள், புரியக் கூடியவர்கள், நல்ல தகுதியுள்ளவர்கள், தக்வா உள்ளவர்கள், தூய்மையானவர்கள் என்னை ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்ற மனநிறைவு இருந்தது. இப்போது முஸ்லிம்கள் ஒரு சக்தி என்று கருதப்படுகின்றனர். எவராவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பைத்தியம் என்று கூறினால், உடன் இருப்பவர், இன்ன மனிதர் மிகவும் புரிந்து கொள்ளக் கூடியவர். அவர் எவ்வாறு ஒப்புக் கொண்டார் என்று கேட்பார். இது எத்தகைய பதில் என்றால் இதற்கு எவராலும் பதில் கூற முடியாது.

ஐரோப்பிய எழுத்தாளர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி தமது எல்லா சக்திகளையும் செலவு செய்து கடுமையாக கூறினார்கள். தவறாகப் பேசினர். பலமுறை அசுத்தமாகப் பேசவும் தயங்கியதில்லை. அன்னாரின் மீது இவ்வளவு செய்யப்பட்டன. ஆனால் அபூபக்ர் பற்றி பேச்சு வரும்போது அபூபக்ர் தன்னலமற்றவர் என்று கூறினர்.

மற்ற எழுத்தாளர்கள் கூறினர்: எந்த மனிதரை அபூபக்ர் ஏற்றுக் கொண்டாரோ அவர் எவ்வாறு பொய்யராக இருக்க முடியும்? நீங்கள் அபூபக்ரைப் பாராட்டுகிறீர்கள். பிறகு அபூபக்ர் ஒருவரை ஏற்றுக் கொண்டால் எனில் அவரும் கூட புகழத்தக்கவராகவே இருப்பார். அபூபக்ர் தன்னலமற்றவர் எனில் அவர் ஒரு பேராசை பிடித்தவரை ஏன் ஒப்புக் கொண்டார்? உள்ளபடியே அவர் (அபூபக்ர்) தன்னலமற்றவர் எனில் பிறகு அவரது எஜமானரும் தன்னலமற்றவர் என்று ஏற்றுக் கொள்ள வேண்டியதே வரும். இது மறுக்க முடியாத ஓர் ஆதாரமாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றியும் கூறி அன்னாரையும் இதில் இணைத்துள்ளார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றி மக்கள் அறிவற்றவர் என்று கூறுகின்றனர். ஆனால் இறைவன் இந்த ஆட்சேபனையை மறுப்பதற்காக எத்தகைய ஏற்பாட்டை செய்தான் என்றால் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் ஆரம்பத்திலேயே அன்னார் மீது ஈமான் கொண்டார்கள்.

மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவியும் முதலில் அன்னாரைப் புகழ்பவராக இருந்தார். பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தாம் (இறைவனால்) நியமிக்கப்பட்டிருப்பாக அறிவித்ததும் கல்வியாளர்களின் ஒரு கூட்டத்தை அல்லாஹ் அன்னார் மீது ஈமான் கொள்வதற்காக நிலைநிறுத்தினான். இந்த கல்வியாளர்களில் மார்க்க அறிஞர்கள், செல்வந்தர்கள், ஆங்கில அறிவு படைத்தவர்கள் இருந்தனர். இதில் இருந்து அனுபவம் பெற்றவாறு இதனைப் பற்றி கூறியவாறு இறைவன் புறமிருந்து ஒரு ஜமாஅத் உருவாகும்போது இந்த மூன்று வகையான மக்கள் ஏற்கின்றனர். ஒன்று அறிவு படைத்தவர்கள் ஈமான் கொண்டனர். செல்வந்தர்கள் ஈமான் கொண்டனர். ஆங்கிய அறிவு படைத்தவர்கள் ஈமான் கொண்டனர். அல்லாஹ் இந்த மூன்று அம்சத்தையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது ஜமாஅத்தில் உருவாக்கினான். (தஃப்ஸீரே கபீர் தொகுதி 9 பக்கம் 139,140)

அன்னாருக்கும் அத்தகைய நண்பர்களை ஏற்பாடு செய்தான். அவர்களை பிற உலகமும் பாராட்டியது. இன்னும் சொல்வதாயின், ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் அறிவு ஞானம் இன்று வரை அஹ்மதி அல்லாத அறிஞர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. அதனை பயன்படுத்துகிறார்கள். அதனை எழுதவும் செய்கிறார்கள். எவ்வாறிருப்பினும் அன்னாரை ஏற்றுக் கொண்டவர்களில் எல்லா வகை மக்களும் இருந்தனர்.

இன்னும் ஓரிடத்தில் மக்காவில் மறுப்பவர்களிடத்தில் பொறாமை பற்றி குறிப்பிடும்போது முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள்

கூறுகிறார்கள்: அல்லாஹ் எத்தகைய ஏற்பாட்டைச் செய்தான் என்றால் மறுப்பவர்களின் உள்ளம் எப்போதும் எரிந்து கொண்டே இருந்தது. அந்த நெருப்பை அணைக்க என்ன ஏற்பாடு செய்வது என்று தெரியாமல் இருந்தனர். எந்தவொரு பெரிய குடும்பமும் அதிலுள்ள ஏதாவது ஒருவர் ரஸூல் கரீம் (ஸல்) அவர்களின் அடிமைத்தனத்தின் கீழ் வராமல் இருக்கவே இல்லை.

ஸுபைர் ஒரு பெரிய குடும்பத்தவர். தல்ஹா ஒரு பெரிய குடும்பத்தவர். ஹஸ்ரத் உமர் பெரிய குடும்பத்தவர். ஹஸ்ரத் உஸ்மான் ஒரு பெரிய குடும்பத்தவர். ஹஸ்ரத் உஸ்மான் பின் மஸ்வூன் பெரிய குடும்பத்தைச் சார்ந்தவர். அதுபோன்று அம்ர் பின் ஆஸ், காலித் பின் வலீது ஆகியோர் பின்னாட்களில் முஸ்லிமாயினர். இவர்கள் மக்காவின் உயர்ந்த குடும்பங்களைச் சார்ந்தவர்களாவர். ஆஸ் எதிரியாக இருந்தார். இவர் அம்ரின் தந்தை ஆவார்.

ஆனால் அம்ர் முஸ்லிமாகி விட்டார். வலீது எதிரியாக இருந்தார். காலித் முஸ்லிமாகி விட்டார். சுருக்கமாகக் கூறுவதாயின், ஆயிரக்கணக்கானோர் இஸ்லாத்தின் பெரிய எதிரியாக இருந்தனர். அவர்களின் பிள்ளைகள் தம்மை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது பாதங்களில் தம்மை இட்டு விட்டனர். யுத்தங்களில் தமது தந்தை மற்றும் உறவினர்களுக்கு எதிராக சண்டையிட்டனர்.

**(தஃப்ஸீரே கபீர் தொகுதி 9 பக்கம் 588)**

ஹஸ்ரத் உஸ்மான் பின் மஸ்வூன் உடைய அபிஸீனியா இடம் பெயர்தல் மற்றும் மக்கா திரும்புதல் பற்றி வருகிறது. ஏற்கெனவே கூறப்பட்டது போன்று உஸ்மான் பின் மஸ்வூன் ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களுள் ஒருவராவார். இப்னு இஸ்ஹாக் கருத்தின்படி இவர் 13 பேருக்குப் பிறகு இஸ்லாத்தை ஏற்றார். அவரும், அவரது மகன் ஸாயிபும் பெருங் கூட்டத்துடன் அபிஸீனியா நோக்கி முதலில் இடம் பெயர்ந்தார். அபிஸீனியாவில் இருக்கும் போது குறைஷிகள் ஈமான் கொண்டு விட்டார்கள் என்ற செய்தி கேள்விப்பட்டு உடனே மக்கா வந்தார்கள்.

இப்னு இஸ்ஹாக் கூறுகிறார்: மக்காவாசிகள் சிரம் பணிந்தார்கள் என்ற செய்தி மக்காவிலிருந்த அபிஸீனியா இடம்பெயர்ந்தவர்களுக்கு கிடைத்தது. அவர்கள் அங்கிருந்து புறப்பட்டனர். கடந்த குத்பாக்களில் இதன் விபரத்தை கூறியுள்ளேன். அவர்கள் ஏன் சிரம் பணிந்தார்கள் என்று வந்தது. எல்லா மறுப்பவர்களும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்று அவர்கள் நினைத்தனர்.

மக்காவுக்கு அருகில் வந்ததும் உண்மை சம்பவம் தெரிய வந்தது. திரும்பி அபிஸீனியா செல்வது சிரமமாக இருந்தது. மற்ற பிற அறிவிப்புகளின் படி சிலர் அங்கிருந்தே திரும்பவும் போகவும் செய்தனர். எனவே அவர்கள் திரும்பிச் சென்றனர். எவ்வாறிருப்பினும் சிலர் சில காலம் அங்கேயே இருந்தனர். ஒவ்வொருவரும் மக்காவாசிகளின் அடைக்கலம் வாங்கும் வரை அங்கேயே தங்கி இருந்தனர். ஒவ்வொருவரும் ஒவ்வொருவரிடம் அடைக்கலம் பெற்றனர். அடைக்கலம் கிடைக்கும் வரை அங்கேயே தங்கி இருந்தனர். ஹஸ்ரத் உஸ்மான் பின் மஸ்வூன் (ரலி) வலீது பின் முகைராவின் அடைக்கலத்தில் வந்தார்கள்.

இப்னு இஸ்ஹாக் அறிவிக்கிறார்: ஹஸ்ரத் உஸ்மான் பார்த்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் மற்ற சஹாபாக்களுக்கும் கஷ்டங்கள் கிடைத்து வந்தன. மக்கள் அவர்களை அடிக்கிறார்கள். அநீதியிழைக்கிறார்கள். வலீது பின் முகைராவின் அடைக்கலத்தால் தாம் நிம்மதியாக இருப்பதாக நினைத்தார்கள். முஸ்லிம் அல்லாத காஃபிர்களின் ஒரு தலைவர் வலீது பின் முகைரா ஆவார்.

இறைவன் மீது ஆணையாக! எனது இரவும் பகலும் ஒரு இணைவைப்பவரின் அடைக்கலத்தில் அமைதியாக கழிந்தது. எனது நண்பர்களுக்கும் குடும்பத்தவருக்கும் அல்லாஹ்வின் வழியில் கஷ்டங்கள் கிடைத்து வருகின்றன. நிச்சயமாக என் மீது ஏதோ தவறு உள்ளது என்று அவர்கள் தம்மையே நொந்து கொண்டார்கள்.

அன்னார், வலீது பின் முகைராவிடம் வந்தார். அவரிடம், அப்தே ஷம்ஸே! இது வலீது பின் முகைரா உடைய பட்டப்பெயர். உமது பொறுப்பை நன்றாகச் செய்து விட்டீர். நான் உமது அடைக்கலத்தில் அமைதியாக இருந்தேன். நான் உமது அடைக்கலத்தை விட்டு வெளியேறி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் செல்ல விரும்புகிறேன். என்னைப் பொருத்தவரை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) மற்றும் அன்னாரது சஹாபாக்களிடம் தான் முன்மாதிரி உள்ளது என்றார்.

வலீது பின் முகைரா கூறினார்: எனது சகோதரரின் மகனே! வலீது பின் முகைரா உஸ்மான் பின் மஸ்வூனின் தந்தையாருடைய உற்ற நண்பர் ஆவார். எனது சகோதரரின் மகனே! உமக்கு எனது அடைக்கலத்தால் ஏதாவது கஷ்டம் ஏற்பட்டு விட்டதா? அல்லது எதுவும் கண்ணியக்குறைவு ஏற்பட்டு விட்டதா? என்றார்.

ஹஸ்ரத் உஸ்மான் பின் மஸ்வூன் இல்லை என்றார். பிறகு நான் அல்லாஹ்வின் அடைக்கலத்தில் திருப்தி அடைகிறேன் என்றார். உமது அடைக்கலத்திலிருந்து வெளிப்பட்டு அல்லாஹ்வின் அடைக்கலத்தில் திருப்தி அடைகிறேன் என்றார். இதற்காக நான் வேறு எவரது அடைக்கலத்தையும் வேண்டவும் இல்லை.

வலீது கூறினார்: நீர் கஅபா இல்லத்திற்கு செல்க. அங்கிருந்து நீர் எனது அடைக்கலத்தை திருப்பி தந்து விடுக. எவ்வாறு நான் அறிவித்து உமக்கு அடைக்கலம் தந்தேனோ அதேபோன்று நீ திரும்பி தந்து விடுக. இருவரும் கஅபா இல்லம் செல்வோம் என்று ஹஸ்ரத் உஸ்மான் கூறினார். வலீது, இவர் உஸ்மான். இவர் எனது அடைக்கலத்தை திருப்பித் தர வந்துள்ளார் என்று கூறினார்.

உஸ்மான் கூறினார்: இவர் உண்மை கூறுகிறார். நிச்சயமாக இவர் தனது வாக்குறுதியில் உண்மையாளராகவும் அடைக்கலத்தில் கண்ணியத்திற்குரியவராகவும் நடந்து கொண்டார். இப்போது நான் அல்லாஹ்வின் அடைக்கலம் தவிர வேறு எவரின் அடைக்கலத்தையும் விரும்பவில்லை. எனவே நான் வலீதின் அடைக்கலத்தை திரும்பக் கொடுத்து விடுகிறேன். இதனைக் கூறி விட்டு உஸ்மான் திரும்பினார்.

**(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 589,590 உஸ்மான் பின் மழ்வூன் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)**

அபிஸீனியா இடம்பெயர்தல் குறித்து பிற சஹாபாக்களின் குறிப்பில் கூறியிருந்தேன். இதனை சுருக்கமாக கூறுகிறேன். ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிபும் எழுதியுள்ளார்கள். வரலாற்றின் பல்வேறு ஆதாரங்கள் மூலம் குறிப்பிட்டுள்ளார்கள். முஸ்லிம்களுக்கு அநீதிகள் அதிகமானதும், குறைஷிகள் தமது தொல்லைகளை அதிகரித்ததும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களிடம் அபிஸீனியாவுக்கு இடம்பெயருமாறு கூறினார்கள்.

அபிஸீனியாவின் அரசர் மிகவும் நேர்மையானவர். நீதியை விரும்புபவராவார். அவரது ஆட்சியில் எவர் மீதும் அநீதி இழைக்கப்படுவதில்லை என்று கூறினார்கள். அபிஸீனியா நாடு எத்தியோப்பியா என்று இப்போது கூறப்படுகிறது. இது வடகிழக்கு ஆப்பிரிக்கப் பகுதியில் அமைந்துள்ளது.

ஏதன் அரபு நாட்டிற்கு முற்றிலும் எதிராக இருந்தது. நடுவில் செங்கடல் தவிர வேறு எந்த நாடும் இடையில் இருக்கவில்லை. அக்காலத்தில் அபிஸீனியாவில் ஓர் உறுதியான ஆட்சி நிலைபெற்றிருந்தது. அங்கிருந்த கிறித்தவ அரசர் நஜ்ஜாஸி என்று அழைக்கப்பட்டார். இப்போது வரை இதனை அவர் எழுதிய காலம் வரை அங்குள்ள ஆட்சியாளர்களுக்கு அவ்வாறே பெயர் கூறப்படுகிறது.

அபிஸீனியாவுடன் அரபு மக்களுக்கு வியாபாரத் தொடர்பு இருந்தது. அப்போதைய நஜ்ஜாஸி ஆட்சியாளர் பெயர் அஸஹ்மா ஆகும். இவர் ஒரு நேர்மையான, நீதியான, ஒருதலைப்பட்சமற்ற, உறுதியான மனிதராக இருந்தார். முஸ்லிம்களின் மீது அநீதி எல்லையைத் தொட்ட போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், உங்களில் எவருக்கு முடியுமோ அவர்கள் அபிஸீனியாவுக்கு இடம்பெயருங்கள் என்று கூறினார்கள்.

இந்த வகையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதற்கு இணங்க நுபுவ்வத்தின் ஐந்தாம் வருடம் ரஜப் மாதம் அதாவது நபித்துவத்திற்கு ஐந்து வருடங்கள் கழித்து 11 ஆண்களும் 4 பெண்களும் அபிஸீனியா நோக்கி இடம்பெயர்ந்தனர்.

அவர்களுள் மிகவும் பிரபல்யமானவர்கள், ஹஸ்ரத் உஸ்மான் பின் அப்வான், அவர்களது மனைவி ருகையா பின்த் ரஸூலுல்லாஹ், அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப், ஸுபைர் பின் அல்அவாம், அபூஹுதைலா பின் உத்பா, உஸ்மான் பின் மஸ்வூன், முஸ்அப் பின் உமைர், அபூ சல்மா பின் அபுல் ஆஸத், அவரது மனைவி உம்மே ஸல்மா ஆகியோர் ஆவர்.

அவர்கள் எழுதுகிறார்கள்: மிகவும் வியக்கத்தக்க விஷயம் என்னவெனில், ஆரம்பத்தில் இடம் பெயர்ந்தவர்களில் அதிகமானவர்கள் குறைஷிகளின் சக்தி வாய்ந்த கோத்திரத்தைச் சார்ந்தவர்களாக இருந்தனர். இதிலிருந்து இரு விஷயங்கள் தெரிய வருகின்றன. ஒன்று, நல்ல ஆற்றலுள்ள கோத்திரத்தைச் சார்ந்தவர்களும் கூட எதிரிகளின் அநீதியிலிருந்து பாதுகாப்பாக இருக்கவில்லை. இரண்டாவது, பலவீனமானவர்கள், அடிமைகள் போன்றோர் மிகவும் பலவீனமாக திக்கற்றவர்களாக இருந்ததால் அவர்களுக்கு இடம்பெயரவும் சக்தி இருக்கவில்லை.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 146,147)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தமது கோணத்தில் இதனை விளக்கியுள்ளார்கள். ஹஸ்ரத் உஸ்மான் பின் மஸ்வூனுக்கு மக்காவில் அடைக்கலம் மற்றும் லபீது பன் ரபிஆ உடன் நடந்த சம்பவம் பற்றி எழுதுகிறார்கள்:

முதலிலேயே கூறினேன். உஸ்மான் திரும்பி மக்கா வந்தார். மக்காவாசிகளின் அநீதி எல்லையைத் தொட்டது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒருநாள் தமது தோழர்களை அழைத்துக் கூறினார்கள். மேற்குப் பகுதியில் கடற்கரை ஓரத்தில் ஒரு பகுதி உள்ளது. அங்கு அல்லாஹ்வை இறை வணக்கம் செய்வதற்காக மக்களுக்கு அநீதி இழைக்கப்படுவதில்லை. மார்க்கத்தை மாற்றியதற்காக கொலை செய்வதில்லை. அங்கு ஒரு நீதியான அரசன் இருக்கிறார்.

எனவே இங்கிருந்து இடம் பெயர்ந்து செல்லுங்கள். அதனால் உங்களுக்கு எளிய நிலை ஏற்படலாம் என்றார்கள். சில முஸ்லிம் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய இந்த வழிகாட்டலை ஏற்று அபிஸீனியாவுக்கு சென்றனர். அவர்களுக்கு மக்காவிலிருந்து வெளியேறுவது ஒன்றும் எளிய காரியமல்ல. உணர்வுப்பூர்வமான விஷயமாக இருந்தது. தமது நாட்டை விட்டு செல்வது சாதாரண விஷயமல்ல. மக்காவாசிகள் தம்மை கஅபா இல்லத்தின் பொறுப்பாளியாகக் கருதி வந்தனர். மக்காவை விட்டு வெளியேறுவது அவர்களைப் பொருத்தவரையில் மிகவும் சகிக்க முடியாத கஷ்டமாகும்.

ஆனால் இவர்களுக்கு இதனை விட்டு வெளியேறுவது மிகவும் வருத்தத்திற்குரிய காரியமாக இருந்தது. வெளியேறுவதும் கூட மிகவும் திருட்டுத்தனம் போன்று செய்ய வேண்டியதிருந்தது. மறைந்து மறைந்து வெளியேற வேண்டியிருந்தது. மக்காவாசிகளுக்குத் தெரிந்தால் நம்மை வெளியேற விடமாட்டார்கள் என்று அறிந்திருந்தனர்.

எனவே தமது அன்பிற்குரிய உறவினர்களிடம் இறுதி விடை பெற முடியாமல் சென்றனர். மறைந்து வெளியேறினர். அவர்களில் நிலையைப் பார்த்தவர்கள் கூடத் தாக்கத்திற்கு உள்ளாகாமல் இருக்க முடியாது. இந்த வகையில் இந்த கூட்டம் வெளியேறிய போது ஹஸ்ரத் உமர், அப்போது இஸ்லாத்தின் கடும் எதிரியாகவும் மறுப்பவராகவும் இருந்தும் கூட முஸ்லிம்களுக்குத் துன்பம் தருவதில் சிகரத்தில் இருந்தும் கூடத் தற்செயலாக இடம்பெயர இருந்தவர்களுள் சிலரை சந்தித்தார்கள்.

அவர்களுள் ஒரு சஹாபி பெண் உம்மே அப்துல்லாஹ் என்ற பெயரை உடையவர். தமது பொருள்களை கட்டி எடுத்துக் கொண்டு வாகனத்தில் செல்வதைப் பார்த்து, இவர்கள் மக்காவை விட்டு விட்டு செல்கின்றனர் என்று புரிந்து கொண்டார்கள்.

எனவே ஹஸ்ரத் உமர், அவரிடம் உம்மே அப்துல்லாஹ் இடம்பெயர்ந்து செல்லும் பொருட்களைப் பார்க்கிறேன் என்றார். அதற்கு உம்மே அப்துல்லாஹ் ஆம், இறைவன் மீது ஆணையாக! நாங்கள் வேறு நாட்டிற்குச் செல்கிறோம். நீங்கள் எங்களுக்கு அதிகமான தொல்லைகள் கொடுத்து விட்டீர்கள். எங்கள் மீது அதிகமான அநீதி இழைத்து விட்டீர்கள். இறைவன் எங்கள் மீது ஏதாவது எளிதை உருவாக்கும் வரை நாங்கள் திரும்பி வரமாட்டோம் என்றேன். உடனே பதிலுக்கு உமர், நல்லது. இறைவன் உங்களுடன் இருக்கட்டும் என்று கூறினார்கள். அவரது குரலில் ஓர் ஆதங்கம் இருந்ததை என்னால் பார்க்க முடிந்தது என்று உம்மே அப்துல்லாஹ் கூறுகிறார்.

ஹஸ்ரத் உமர், அப்போது முஸ்லிம்களுக்கு எதிரியாக இருந்தார்கள். ஆனால் அவர்களில் இடம்பெயரலைக் கேட்டு மிகவும் உணர்வுப்பூர்வமாகி விட்டார்கள். இறைவன் உம்முடன் இருப்பானாக என்று கூறினார்கள் என்றால் அக்குரலில் ஒரு தேம்புதல் இருந்தது. அதனை நாம் முன்னர் ஒருபோதும் உணர்ந்ததில்லை. பிறகு உடனேயே முகத்தை திருப்பிக் கொண்டு சென்று விட்டார்கள். இந்த சம்பவத்தால் அன்னாரின் உள்ளம் மிகவும் துயரமடைந்துள்ளது என்பதை நான் உணர்ந்தேன் என்று உம்மே அப்துல்லாஹ் கூறுகிறார்.

எவ்வாறிருப்பினும், இவர்களின் ஹிஜ்ரத் பற்றி மக்காவாசிகளுக்கு தெரிய வந்ததும் அவர்கள் அம்மக்களைப் பின்தொடர்ந்தனர். ஆனால் அக்கூட்டம் முன்னரே கடற் கரை வரை சென்று விட்டது. அங்கிருந்து அபிஸீனியா நோக்கி புறப்பட்டும் விட்டது. மக்கவாசிகளுக்கு இது தெரிய வந்த போது ஒரு குழுவை அபிஸீனியா மன்னரிடம் அனுப்ப வேண்டும் என்று முடிவு செய்தனர்.

அவரை முஸ்லிம்களுக்கு எதிராக தூண்ட வேண்டும். முஸ்லிம்களை மக்கவாசிகளிடம் ஒப்படைக்குமாறு தூண்ட வேண்டும் என்று முடிவு செய்தனர். இவ்வகையில் அந்த கூட்டம் அபிஸீனியாவை நோக்கி சென்றது. மன்னரைச் சந்தித்தது. சபையில் இருந்த அதிகாரிகளையும் நன்றாகத் தூண்டினார்கள். அல்லாஹ்

அபிஸீனியாவின் அரசரின் உள்ளத்தை உறுதிப்படுத்தினான். இம்மக்களின் இவ்வளவு அடம்பிடித்த நிலையிலும் சபையினர் அடம்பிடித்த நிலையிலும் கூட அவர்கள் எல்லாம் மக்காவாசிகளின் பக்கம் வந்த நிலையிலும் அவர்கள் இந்த குழுவை மக்காவாசிகளிடம் ஒப்படைத்து விடுங்கள் என்று கூறியும் கூட அவர் முஸ்லிம்களை மக்காவாசிகளிடம் ஒப்படைக்க மறுத்து விட்டார். அந்த குழு செலிழந்து திரும்பியது. உடனே மக்காவசிகள் அக்குழுவைத் திரும்ப அழைக்க வேறொரு திட்டம் தீட்டினர்.

அது என்னவென்றால், அபிஸீனியா சென்ற சில குழுக்களிடம் மக்காவாசிகள் அனைவரும் முஸ்லிமாகி விட்டனர் என்று பிரபல்யப்படுத்தினார். இந்த செய்தி அபிஸீனியா சென்று சேர்ந்ததும் அவர்கள் மகிழ்ச்சியுடன் மக்காவுக்கு திரும்பினர். மக்கா வந்ததும் அந்த செய்தி விஷமத்துடன் பிரபல்யப்படுத்தப்பட்டுள்ளது என்று அவர்களுக்கு தெரிய வந்தது. அதில் உண்மை இல்லை.

நான் ஏற்கெனவே கூறியது போன்று இதனைத் தெரிந்து கொண்டதும் திரும்பி மக்கா வந்தவர்களுள் சிலர் மீண்டும் அபிஸீனியா சென்றனர். சிலர் மக்காவில் தங்கி விட்டனர். தங்கியவர்களுள் உஸ்மான் பின் மஸ்வூனும் ஒருவர் என்று முஸ்லிஹ் மவ்வூது கூறுகிறார்கள். இவர் மக்காவின் பெரிய தலைவரின் மகன் ஆவார். இம்முறை இவரது தந்தையின் நண்பரான வலீத் பின் முகைரா அவருக்கு அடைக்கலம் கொடுத்தார். அவர் அமைதியாக மக்காவில் இருந்தார்.

இந்த சமயத்தில் அவர், மற்ற முஸ்லிம்களுக்கு துக்கம் கொடுக்கப்படுகிறது. அவர்கள் மீது மிகவும் அதிகமாக துன்பம் இழைக்கப்படுகிறது. அவர் தன்மானமிக்க ஓர் இளைஞராக இருந்தார். எனவே வலீதிடம் சென்று, உங்களது அடைக்கலத்தை திருப்பித் தந்து விடுகிறேன். மற்ற முஸ்லிம்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்க நான் அமைதியாக இருப்பதை என்னால் பார்க்க முடியவில்லை என்று கூறினார். உடனே வலீது, உஸ்மான் இப்போது எனது அடைக்கலத்தில் இல்லை என்று அறிவித்து விட்டார்.

இதன் பிறகு அரபு நாட்டின் புகழ் பெற்ற கவிஞர் ஆகிய லபீது, மக்காவின் என் அரங்கில் அமர்ந்தவாறு கவிதையை கூறிக் கொண்டிருந்தார். அவர், குல்லு னஹீமுன் லா மஹாலத் ஸாயிலன். ஒவ்வோர் அருளும் ஒருநாள் அழியக் கூடியது என்ற ஒரு வரிசையை கூறினார். உஸ்மான் பின் மஸ்வூன், இது தவறாகும்; ஜன்னத்தின் அருள்கள் எப்போதும் இருக்கக் கூடியவையாகும் என்று கூறினார்.

லபீது பெரும் மனிதராக இருந்தார். இந்த பதிலைக் கேட்டு ஆவேசம் அடைந்தார். அவர், உங்களது விருந்தாளியை முன்னர் இவ்வாறு அவமானம் செய்ததில்லையே? இப்போதுதான் அதுபோன்று நடந்துள்ளது என்றார். உடனேயே ஒரு மனிதர், இவர் ஒரு முட்டாள். இவரது வார்த்தையைப் பொருட்படுத்தாதீர் என்றார். ஹஸ்ரத் உஸ்மான் தமது கூற்றில் உறுதியாக இருந்தார். இதில் என்ன முட்டாள்தனம் உள்ளது. நான் கூறிய விஷயம் உண்மையாகும் என்றார்.

உடனே ஒருவர் எழுந்து அவரது முகத்தில் குத்தினார். இதனால் அவரது ஒரு கண் வீங்கி விட்டது. வலீது அப்போது அந்த சபையில் இருந்தார். அவர்தான் முதலில் அவருக்கு அடைக்கலம் கொடுத்திருந்தார். அவர் உஸ்மானின் தந்தையின் நண்பராக இருந்தார். உஸ்மானின் தந்தையுடன் ஆழிய நட்பு இருந்தது. உஸ்மானின் தந்தையார் மரணித்து விட்டார்கள். தமது இறந்துபோன நண்பரின் மகனின் நிலையை வலீதால் காண முடியவில்லை. மக்காவின் நடைமுறைக்கு ஏற்ப உஸ்மான் அவரது அடைக்கலத்தில் அப்போது இருக்கவில்லை. எனவே அவருக்கு உதவியும் அவரால் செய்ய முடியாது. எனவே அவரால் எதுவும் செய்ய முடியவில்லை.

எனவே மிகவும் ஆவேசத்துடன் அவர், உஸ்மானைப் பார்த்து, எனது சகோதரரின் மகனே! இறைவன் மீது ஆணை. உமது இந்தக் கண் இந்த கஷ்டத்திலிருந்து பாதுகாப்பாக இருந்திருக்க முடியும். நீர் ஒரு வலுவான பாதுகாப்பில் இருந்தீர். அதாவது வலீது உடைய அடைக்கலத்தில் இருந்தீர். ஆனால் இப்போது நீயே அந்த அடைக்கலத்தை விட்டு விட்டீர். இப்போது இந்த நாளை பார்த்தீர் என்றார்.

அதற்கு உஸ்மான், என்னுடன் என்ன நடந்ததோ அதனை நான் விரும்பினேன். எனது பழுதான கண்ணிற்காக ஆதங்கப்படுகிறீர். ஆனால் எனது ஆரோக்கியமான இன்னொரு கண்ணும் எனது சகோதரிக்கு ஏற்பட்ட கஷ்டம் எனக்கு ஏற்படவில்லையே? என்று ஆதங்கப்படுகிறது என்று பதில் கூறினார். அவர் கூறுகிறார்: நான் ஏற்கெனவே கூறியது போன்று முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய முன்மாதிரி எனக்கு போதுமானது என்று பதில் கூறினார். அவர்களே கஷ்டப்படும்போது நான் ஏன் கஷ்டப்படக் கூடாது? எனக்கு இறைவனது ஆதரவு போதுமானது என்றார்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 202–205)

உஸ்மான் பின் மஸ்வூன் மற்றும் லபீது என்ற பிரபல கவிஞரின் சம்பவம் பற்றி வரலாற்றில் இவ்வாறு காணப்படுகிறது. அதனை கூறுகிறேன். அவர் அரபிகளின் பெரிய கவிஞராக இருந்தார். நான் ஏற்கெனவே கூறியது போன்று குறைஷிகளின் சபையில் அமர்ந்திருந்தார். உஸ்மானும் அவருடன் அமர்திருந்தார்.

லபீது முதலில் இவ்வாறு கவிதை கூறினார். அலா குல்லி மாகலல்லாஹி பாத்தில். கவனத்தில் கொள்ளுங்கள். அல்லாஹ்வைத் தவிர அனைத்தும் பொய்யானது. உடனே உஸ்மான், நீர் கூறியது உண்மை என்றார். உடனே லபீது, குல்லு னயீமின் லாமஹாலத்தா ஸாயிலன் நிச்சயமாக ஒவ்வொரு பொருளும் அழியக் கூடியதே என்று கூறினார்.

ஹஸ்ரத் உஸ்மான், நீர் கூறியது பொய். மக்கள் அவரைப் பார்த்தார்கள். பிறகு மீண்டும் லபீதிடம் திரும்பக் கூறுமாறு கேட்டனர். லபீது திரும்ப கவிதையை கூறினார். உஸ்மானும் அதேபோன்று ஒருமுறை உண்மைப்படுத்தினார். ஒருமுறை பொய்ப்படுத்தினார். ஜன்னத்தின் அருட்கள் அழியக்கூடியவை அல்ல என்றார்.

உடனே லபீது, குறைஷியின் கூட்டமே! உங்கள் சபைகள் முன்னர் இவ்வாறு இருந்ததில்லை என்றார். ஒரு முட்டாள் எழுந்து உஸ்மானின் முகத்தில் ஒரு குத்து விட்டான். இதனால் அவர்களின் கண் வீங்கி விட்டது. அவரை சுற்றி இருந்தவர்கள், உஸ்மான், நீர் ஓர் உறுதியான அடைக்கலத்தில் இருந்தீர். உமது கண் இதுபோன்ற கஷ்டத்தில் இருந்து பாதுகாப்பாக இருந்தது என்று கூறினர்.

உடனே உஸ்மான், இறைவன் உடைய பாதுகாப்புதான் மிகவும் கண்ணியத்திற்குரியது. எனது மற்ற கண்ணும் கூட இதுபோன்ற கஷ்டத்தை விரும்புகிறது. எனக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) மற்றும் அவர்கள் மீது ஈமான் கொண்டவர்களின் பின்பற்றுதல் தேவையாகும் என்று கூறினார். பிறகு வலீது அவரிடம், எனது பாதுகாப்பில் உமக்கு என்ன சேதம் ஏற்பட்டது? என்றார். உடனே உஸ்மான், எனக்கு அல்லாஹ்வின் அடைக்கலம் தவிர வேறு எந்த அடைக்கலத்தின் தேவையும் இல்லை என்று கூறினார்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 590 உஸ்மான் பின் மழ்வூன் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இதுவே இவர்களின் ஈமானின் நிலையாகும். இதுவே தம்முடன்

இருப்பவர்களின் மீது இருந்த வேதனையாகும். அவர்கள் கஷ்டப்படும்போது நமக்கு ஏன் அந்த கஷ்டம் இல்லை? ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது இருந்த அர்ப்பணிப்பும் அன்பும் இந்த கஷ்டத்திலிருந்து நான் ஏன் விலகி இருக்க வேண்டும்? என்று விரும்பியது. ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்மாதிரியைப் பார்த்து கஷ்டம் ஏற்பட்டது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூது கூறுகிறார்கள்: உஸ்மான் பின் மஸ்வூன் இவ்வாறு பதில் கூறக் காரணம், அவர் திருக்குர்ஆனை கேட்டுள்ளார். இஸ்லாமிய போதனைகளைக் கேட்டிருந்தார். அவரது பார்வையில் கவிதைகள் எந்த மதிப்புக்குரியவையாகவும் இருக்கவில்லை. லபீது தாமே முஸ்லிமான பிறகு இதே நிலையைத்தான் தேர்ந்தெடுத்தார்.

ஹஸ்ரத் உமர் ஒருமுறை தமது கவர்னரிடம் எனக்கு பிரபல்யமான கவிஞர்களின் தற்போதைய கவிதைகளை அனுப்புங்கள் என்று சொல்லி அனுப்பினார்கள். லபீது அப்போது முஸ்லிமாகி இருந்தார். அவரிடம் அவரது விருப்பத்தை தெரிவிக்குமாறு கூறப்பட்டது. அவர் திருக்குர்ஆனின் சில வசனங்களை எழுதி அனுப்பினார்.

ஹஸ்ரத் உஸ்மான் பின் மஸ்வூனுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்த தொடர்பை ஒரு சம்பவம் மூலம் கூறலாம். அறிவிப்புகளில் வருகிறது. அவர் வஃபாத் ஆகும்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவரை முத்தமிட்டார்கள். அப்போது அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது மகன் இப்ராஹீம் வஃபாத் ஆனபோது அன்னார், அல்ஹிக்கு ஃபிஸலஃபி னஸ்ஸாலி உஸ்மான் பின் மஸ்வூன். நம்முடைய நல்லடியாரான உஸ்மான் பின் மஸ்வூன் உடைய அருகாமையில் சென்று சேர்வாயாக என்று கூறினார்கள்.

(ஃபஸாயிலுல் குர்ஆன் எண் 4, அன்வாருல் உலூம் தொகுதி 12 பக்கம் 456)

ஹஸ்ரத் உஸ்மான் பின் மஸ்வூன் உடைய மதீனா இடம்பெயரல் சம்பவம் இவ்வாறு காணப்படுகிறது. ஹஸ்ரத் உஸ்மான் பின் மஸ்வூன், ஹஸ்ரத் குதாமா பின் மஸ்வூன், ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூன், ஹஸ்ரத் சாயிப் பின் உஸ்மான் ஆகியோர் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்தபோது, அப்துல்லாஹ் பின் ஸல்மா அஜ்லானி வீட்டில் தங்கினார்கள். இன்னொரு கூற்றின்படி ஹஸ்ரத் ஹிஸாம் பின் ரபிஆ இடம் தங்கினார்கள்.

முஹம்மது பின் வகாதி அறிவிக்கிறார்கள்: மஸ்வூன் குடும்பத்தில் உள்ளவர்கள் ஆண்கள், பெண்கள் அனைவரும் ஹிஜ்ரத் செய்து மதீனாவுக்கு சென்று விட்டனர். அவர்களில் எவரும் மக்காவில் எஞ்சி இருக்கவில்லை.

ஹஸ்ரத் உம்மே அலா அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) மற்றும் முஹாஜிரீன் ஆகியோர் மதீனாவுக்கு வந்ததும், அவர்களை அன்ஸார்கள் அனைவரும் தமது வீடுகளில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்பினர். அவர்களிடம் சீட்டு குலுக்கி போடப்பட்டு அதில் உஸ்மான் பின் மஸ்வூன் எமது பங்கில் கிடைத்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உஸ்மான் பின் மஸ்வூனுக்கும் அபூ ஹிஷம் பின் தய்யிஹானுக்கும் இடையில் சகோதரத்துவத்தை நிலைநாட்டினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 302,303 உஸ்மான் பின் மழ்வூன் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உஸ்மான் மதீனாவை நோக்கி ஹிஜ்ரத் செய்தார்கள். பத்ர் போரில் கலந்து கொண்டார்கள். அனைவரையும் விட அதிக உத்வேகத்துடன் வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டனர். பகலில் நோன்பு நோற்றனர். இரவில் நின்று வணங்கினர். விருப்பங்களிலிருந்து விலகி இருந்தனர். பெண்களை விட்டு விலகி இருக்க முயற்சி செய்தனர். உலகை விட்டு விடுவதற்கும் தற்கொலை செய்வதற்கும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் அனுமதி கேட்டார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவ்வாறு செய்வதை தடுத்தார்கள். இது வரலாற்று நூலான அஸ்தல் காபாவில் எழுதப்பட்டுள்ளது.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 590 உஸ்மான் பின் மழ்வூன் – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உஸ்மான் பின் மஸ்வூன் உடைய மனைவி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய தூய மனைவியரிடம் வந்தார்கள். தூய மனைவியர் அவரை மிகவும் அலங்கோலமாகப் பார்த்தார்கள். மிகவும் அழுக்கான ஆடையும், கலைந்த கூந்தலுமாக இருந்தார். நீர் ஏன் இவ்வாறு இருக்கிறீர் என்று கேட்டார்கள். உங்களை கவனித்துக் கொள்ளும், உங்கள் கணவரை விட குறைஷிகளில் பெரும் செல்வந்தர் எவரும் இல்லையே? நீங்கள் செய்ய முடியாது என்பதில்லையே? பிறகு நீர் உமது நிலையை சரியாக வைத்துக் கொள்ளுங்கள் என்றார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் உடைய மனைவி கூறினார்: தூய மனைவியர் எல்லாரும் அமர்ந்திருந்தார்கள். அவர்களிடம், அவருக்கு எதுவும் ஆசையில்லை. அவர் செல்வந்தர் இல்லையா? என்று கேட்டதற்காக அவர் கூறினார். அவருக்கு எம் மீது எந்த ஆசையும் இல்லை. அவர் எப்போதும் அல்லாஹ்வுக்கு இபாதத் செய்து கொண்டே இருப்பார். தம் பக்கம் கவனம் செலுத்துவதில்லை. பகலில் நோன்பு வைப்பார் என்றார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் மனைவியர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். உஸ்மான் உடைய மனைவியின் பேச்சைக் கேட்டதைக் கூறியதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஸ்மானிடம் கூறினார்கள். உமக்கு எம்மிடம் முன்மாதிரியில்லையா? அவர், எனது தாயும் தந்தையும் உங்களுக்கு அர்ப்பணம். என்ன நடந்தது? நான் முற்றிலும் உங்களைப் பின்பற்றவே விரும்புகிறேன் என்று கூறினார். உடனே அன்னார், நீர் பகலில் நோன்பு நோற்கிறீரா? இரவில் இபாதத் செய்கிறீர்களா? என்று கேட்டார்கள். அவர், ஆம்; அவ்வாறுதான் செய்கிறேன் என்றார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அவ்வாறு செய்யாதீர்கள். உங்கள் கண்களுக்கு உங்களிடம் உரிமை உள்ளது. உங்கள் உடலுக்கும் உம்மீது உரிமை உள்ளது. உங்கள் குடும்பத்திற்கும் உங்கள் மீது உரிமை உள்ளது. உங்கள் மனைவி மக்களுக்கு உங்கள் மீது உரிமை உள்ளது.

எனவே நீர் தொழும். பிறகு உறங்கவும் செய்யுங்கள். அதுவும் அவசியமாகும். இரவில் விழித்து நஃபில் தொழுங்கள். ஆனால் உறங்குவதும் அவசியமாகும். நோன்பும் வையுங்கள். விடவும் செய்யுங்கள். நஃபில் நோன்பு வையுங்கள். சில நாள் நோன்பின்றியும் இருக்க வேண்டும் என்றார்கள். சில நாட்களுக்குப் பிறகு அவரது அவரது மனைவி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய மனைவியரிடம் மீண்டும் வந்தார். அப்போது அவர் நறுமணம் பூசி இருந்தார். மணமகள் போன்று இருந்தார். என்ன விஷயம் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள் என்று கேட்டதும் மக்களுக்கு எது

கிடைத்து வந்ததோ அது எனக்கு கிடைக்கிறது. அதாவது என் கணவர் என் பக்கமும் கவனம் செலுத்துகிறார் என்றார்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 302 உஸ்மான் பின் மழ்வூன் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடைய அறிவிப்பு வருகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உஸ்மான் பின் மஸ்வூனை அழைத்து, நீர் எனது நடைமுறையை விரும்பவில்லையா? என்று கேட்டார்கள். அவர், யாரஸூலல்லாஹ்! ஏன் இல்லை! உங்கள் நடைமுறையையே தேடுகிறேன் என்றார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் தூங்கவும் செய்கிறேன். தொழவும் செய்கிறேன். நோன்பும் வைக்கிறேன். சிலவேளை வைப்பதும் இல்லை. நான் திருமணமும் செய்கிறேன்.

உஸ்மானே! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். உமது மனைவிக்கு உரிமை உள்ளது. உமது விருந்தினருக்கும் உரிமை உள்ளது. உமது நஃப்ஸுக்கும் உம்மிடம் உரிமை உள்ளது. எனவே அவ்வப்போது நோன்பும் வையுங்கள். சிலவேளை வைக்காமல் இருங்கள். தொழவும் செய்யுங்கள். தூங்கவும் செய்யுங்கள் என்று கூறினார்கள்.

(சுனன் அபீ தாவூது, ஹதீஸ் எண் 1369)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் புகாரியின் சான்று காட்டி கூறுகிறார்கள். சஅத் பின் அபி வக்காஸ் அறிவிக்கிறார்கள்: உஸ்மான் பின் மஸ்வூன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் பெண்களை விட்டு முற்றிலும் விலகி இருக்க அனுமதி கேட்டார். அன்னார் அனுமதி வழங்கவில்லை. அன்னார் அதற்கு அனுமதி வழங்கியிருந்தால் நாங்களும் கூட தற்கொலை செய்யவோ, உணர்வுகளை முடித்துக் கொள்ள முழு முயற்சி செய்யத் தயாராக இருந்தோம்.

புகாரி ஹதீஸில் வருகிறது. மொழிபெயர்ப்பை கூறுகிறேன். சஅத் பின் அபி வக்காஸ் கூறுகிறார்: உஸ்மான் பின் மஸ்வூன் மண வாழ்க்கையிலிருந்து விலகியிருக்க ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அனுமதி கேட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மறுத்து விட்டார்கள். சஹீஹ் புகாரி கிதாபுன் நிகாஹ்வின் ஹதீஸில் வருகிறது. நான் ஏற்கெனவே கூறியதுபோன்று அன்னார் அனுமதி வழங்கினால் நாங்கள் அனைவரும் உலகை விட்டு விலகி இருப்போம்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுன் நிக்காஹ், ஹதீஸ் எண் 5073)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் மேலும் எழுதுகிறார்கள்: உஸ்மான் பின் மஸ்வூன் பனூ ஜுமஹ் கோத்திரத்தில் மிகவும் சூஃபி இயல்பு கொண்ட மனிதர். அறியாமைக் காலத்தில் கூட மதுபானங்களை விட்டு விலகி இருந்தார். இஸ்லாத்தை ஏற்கும் முன்னர் கூட ஒருபோதும் மது அருந்தியதில்லை. இஸ்லாத்தை ஏற்ற பிறகு உலகை விட்டு விட விரும்பினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தில் துறவறம் அனுமதிக்கப்படவில்லை என்று கூறி அதற்கு அனுமதி வழங்கவில்லை.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 124)

இவ்வுலகில் வாழுங்கள். இந்த உலகத்தின் அருள்களிலிருந்து பயன் அடையுங்கள். அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள அருள்களிலிருந்து பயனடையுங்கள். ஆனால் அல்லாஹ்வை ஒருபோதும் மறந்து விடாதீர்கள் என்று இஸ்லாம் கூறுகின்றது.. ஆக இது எப்போதும் நமக்கு முன் இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் குதாமா பின் மஸ்வூனிடம் இருந்து அறிவிக்கப்படுகிறது. ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் ஹஸ்ரத் உஸ்மான் பின் மஸ்வூனை பார்த்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் தமது வானத்தின் மேல் இருந்தார்கள். இருவரும் அஸாயா என்ற மலை அடிவாரத்தில் சந்தித்தார்கள். துல்குல்பாவிற்கு பிறகு ஸிஹ்பாவின் வழியில் 77 மைல் தூரத்தில் இருந்தது.

எவ்வாறிருப்பினும் அங்கு ஹஸ்ரத் உமர் உடைய ஒட்டகம் ஹஸ்ரத் உஸ்மான் பின் மஸ்வூன் உடைய ஒட்டகத்தை நெருங்கியது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய குழு மிகவும் அருகில் வந்து விட்டது. ஹஸ்ரத் உஸ்மான் பின் மஸ்வூன் கூறினார். யா கலகல் பித்னா நீர் எமக்கு மிகவும் கஷ்டத்தை கொடுத்து விட்டீர். வாகனத்தை நிறுத்தி விட்டு உமர் அருகில் வந்தார்கள். உஸ்மான் பின் மஸ்வூனைப் பார்த்து ஹஸ்ரத் உமர் கூறினார். அபூ ஸாயிபே! உம்மை அல்லாஹ் மன்னிக்கட்டும். நீர் என்னை அழைத்ததை யார் உமக்கு கூறினார்கள். நீ என் ஹல்கல் பித்னா குழப்பத்தை அழிப்பவர் என்று கூறினீர்.

ஹஸ்ரத் உஸ்மான் கூறினார்கள்: நான் உமக்கு அந்த பெயரை வைக்கவில்லை. மாறாக உமக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் குழுவின் முன்னணியில்தான் இருந்தார்கள். அன்னார் முன்னால் சென்று கொண்டிருந்தார்கள். பிறகு ஹஸ்ரத் உஸ்மான் பின் மஸ்வூன் கூறினார். முன்னால்தான் இருக்கிறார்கள். நீர் விரும்பினால் கேட்டுப் பார்க்கலாம். ஹஸ்ரத் உமர் (ரலி) எம்முன் கடந்து சென்றார். அப்போது நாங்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் அமர்ந்திருந்தோம்.

ஹுஸூர் (ஸல்) அவர்கள், இம்மனிதர் (ஹஸ்ரத் உமர்) கல்குல் பித்னா குழப்பத்தின் வழியில் தடை ஆவார் என்ற கூறினார்கள். இதனை கூறியவாறு அவர் தனது கைகளால் சைகை செய்தார்கள். குழப்பம் ஒரு பக்கம் அடைபட்டு விடும். இவர் உங்களிடம் உயிருடன் இருக்கும் வரை அது நடக்கும்.

(மஜ்மவுல் கபீர் லித்திப்ரானி தொகுதி 9 பக்கம் 38,39, ஹதீஸ் எண் 8321 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் உயிருடன் இருப்பார்களோ அதுவரை இஸ்லாத்திற்கு எந்த குழப்பமும் ஏற்படாது என்றார்கள். மேலும் வரலாறும் இதனையே கூறுகின்றது. அன்னாருக்குப் பிறகே பெரும் குழப்பங்கள் ஏற்பட்டன.

இந்த இடத்தில் ஹஸ்ரத் உஸ்மான் பின் மஸ்வூன் உமர் (ரலி) காலத்திற்குப் பிறகு ஏற்படும் குழப்பம் பற்றி கூறினார்கள். அதன் விபரத்தை கூறுகிறார்கள். ஹஸ்ரத் ஹுதைபா அறிவிக்கிறார்கள். நாங்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் அமர்ந்திருந்தோம். அவர், உங்களில் எவர் குழப்பங்கள் பற்றி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது கூற்றுகளை நினைவில் வைத்துள்ளார் என்று கேட்டார்கள். நான், நான் என்று கூறினேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியவாறே நினைவில் வைத்துள்ளேன் என்றேன்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறிய அறிவிப்புகளை கூறுவதில் மிகுந்த துணிச்சல் வாய்ந்தவராக உள்ளீர். உமக்கு நிச்சய உறுதி உள்ளது. மிகவும் துணிச்சலுடன் அதனை செய்கிறீர். அப்போது ஹுதைபா கூறுகிறார்: நான் கூறினேன். மனிதனுக்கு சோதனை அவனது மனைவி, பொருள்கள், பிள்ளைகள் அக்கம் பக்கத்தவர்களால் வருகிறது. தொழுகை, நோன்பு ஸக்காத் ஆகியவற்றிற்கு கட்டளையிடுவதும் தீமைகளிலிருந்து தடுப்பதும் ஆகியவை சோதனைகளிலிருந்து விலக்கி வைக்கிறது என்று நபி

(ஸல்) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் உமர் கூறினார். நான் அதனை கேட்கவில்லை. பிள்ளைகள், செல்வம் இவற்றால் குழப்பங்களை தொழுது நோன்பு வைத்து, ஸதக்கா கொடுத்து நன்மைகளை செய்து அகற்ற முடியும் என்றதும் ஹஸ்ரத் உமர் கூறினார். நான் அதனை கேட்கவில்லை. கடல் அலை போன்று தொடர்ந்து வரும் குழப்பங்களைக் கேட்கிறேன். இந்த உம்மத்தில் வரும் குழப்பம் பற்றி கேட்கிறேன்.

ஹஸ்ரத் ஹுதைபா கூறினார்: அமீருல் முஃமினீன் உங்களுக்கு அந்த குழப்பம் பற்றி பயம் வேண்டாம். அந்த குழப்பம் உங்களுக்கு உயிர் இருக்கும் வரை வரப்போவதில்லை. ஏனெனில் உங்களுக்கு அந்த குழப்பங்களுக்கும் இடையில் மூடப்பட்ட வாசல் ஒன்று உள்ளது. ஹஸ்ரத் உமர், அந்த வாசல் உடைக்கப்படுமா? திறக்கப்படுமா? என்று கேட்டார்கள்.

ஹஸ்ரத் ஹுதைபா கூறினார்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உமருக்கும் குழப்பத்திற்கும் இடையில் மூடப்பட்ட வாசல் உள்ளது என்றார்கள். உமர் அவரிடம் அந்த வாசல் உடைக்கப்படுமா? திறக்கப்படுமா? என்று கேட்டார்கள். உடைக்கப்படும் என்று ஹஸ்ரத் ஹுதைபா கூறினார். ஹஸ்ரத் உமர் அவ்வாறென்றால் அது முடிவடையவே செய்யாது என்று கூறினார்கள். வாசலைத் திறந்தால் அடைக்கப்பட வாய்ப்பு உள்ளது. உடைக்கப்பட்டு விட்டால் வாசலை மூடுவது மிகவும் சிரமமான விஷயமாகும்.

எனவே உமர் கூறினார்கள்: பிறகு அது அடையவே செய்யாது. அதாவது குழப்பம் ஆரம்பித்து விட்டால் அது தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கும். இப்போது நாம் பார்க்கிறோம். முஸ்லிம் உம்மத்தில் குழப்பம் ஒன்றுக்குப் பிறகு ஒன்று உருவாகிக் கொண்டே இருக்கிறது. ஹஸ்ரத் உஸ்மான் காலத்திற்குப் பிறகு ஹஸ்ரத் அலியின் காலத்தில், பிறகு இப்போது வரை முஸ்லிம்களிடமும் இந்த குழப்பம் உள்ளது. தொடர்கிறது. ஒருவருக்கு மற்றவர் மீது இரத்த வெறி உள்ளது. இக்காலத்தில் அந்த குழப்பத்தின் வாசலை அடைக்க வந்த ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலம் நிலைநாட்டிய அவற்றின் பின்னால் வராத வரை குழப்பம் அதிகமாகிக் கொண்டே தான் இருக்கும். அல்லாஹ் நம்மைப் பாதுகாப்பானாக. அஹ்மதிகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலம் ஏற்படுத்தித் தந்த கேடயத்தின் பின் நிற்பதற்கு அல்லாஹ் வாய்ப்பு வழங்குவானாக. அந்த சுவரின் பின்னால் நிற்பார்களாக.

எவ்வாறிருப்பினும் இந்த விஷயம் கூறப்பட்டது. அதாவது இந்த குழப்பம் வந்து விட்டால் பிறகு நிற்காது என்று உமர் (ரலி) கூறினார்கள். அப்போது அறிவிப்பாளர் ஹுதைபாவிடம் கூறுகிறார். ஹஸ்ரத் உமர் அந்த வாசல் அறிவாரா? என்று கேட்கப்பட்ட போது ஹஸ்ரத் ஹுதைபா கூறினார்கள். ஆம். அவர்கள் பகலுக்குப் பிறகு இரவு வருவது பற்றி தெரிந்திருப்பது போன்று தெரிந்திருந்தார்கள். தமக்குப் பிறகு குழப்பம் வரும் என்று அறிந்திருந்தார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் மவாகியத்துஸ் சலாத் ஹதீஸ் எண் 525)

ஹஸ்ரத் உஸ்மான் பின் மஸ்வூன் மதீனாவில் வஃபாத் ஆகிய முதல் முஹாஜிர் (இடம்பெயர்ந்தவர்) ஆவார். இவர் ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டில் மரணம் அடைந்தார்கள். சிலரது கருத்தின்படி இவர் பத்ர் போருக்கு 22 மாதத்திற்குப் பிறகு வஃபாத் ஆனார். இவர் ஜன்னத்துல் பகியில் அடக்கப்பட்ட முதல் மனிதராவார்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 591 உஸ்மான் பின் மழ்வூன் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் இவரைப் பற்றி இன்னும் சில விபரங்கள் கூறவிருக்கின்றன. வருங்காலத்தில் கூறுவேன் – இன்ஷா அல்லாஹ்.

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

மொழிபெயர்ப்பை கேட்டுப் பயனடைந்தனர். பெண்களின் சிறப்பு அமர்வின் நிகழ்ச்சிகளும் கூட அரபி, மலையாளம், ஆங்கிலம், இந்தோனேஷியன், மற்றும் வங்காளம் ஆகிய 5 மொழிகளில் உடனுக்குடன் மொழியாக்கம் செய்யப்பட்டது.

### நிக்காஹ்களுக்கான அறிவிப்பு

பல பெற்றோர்களுக்கும் அவர்கள் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பத்தில் அவர்களது பிள்ளைகளின் நிக்காஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய ஊரான காதியானில் நடக்க வேண்டும் என்ற விருப்பம் இருக்கின்றது.

அல்லாஹ்வின் அருளால் இந்த வருடம் ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தில் 29 டிசம்பர் 2018 அன்று தாருல் அன்வார் பள்ளிவாயிலில் மதிப்பிற்குரிய மவ்லானா முஸஃப்பர் அஹ்மது நாஸிர் சாஹிப் (தலைமையக நாஸிர் இஸ்லாஹோ இர்ஷாத்) அவர்கள் 22 நிக்காஹ்களுக்கான அறிவிப்பை செய்தார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் அவர்கள் ஹுஸூர் அவர்கள் திருமணம் தொடர்பாக கூறியிருந்த பொன்னான போதனைகளை படித்துக் காட்டினார்கள். இதற்கு பிறகு மற்ற நாட்களில் மேலும் 12 நிக்காஹ்களுக்கான அறிவிப்பு செய்யப்பட்டது.

### Humanity First கண்காட்சி

காதியான் ஆண்டு மாநாடு 2018 –ன் சந்தர்ப்பத்தில் ஸய்யிதுனா ஹுஸூர் (அய்) அவர்களின் அனுமதியுடன் Homeopathy First இந்தியா தரப்பிலிருந்து அஹ்மதிய்யா தலைமையக நூலகத்திலுள்ள ஹாலில் கண்காட்சி நடத்தப்பட்டது. இந்த கண்காட்சியில் கடந்த இரு வருடங்களில் Hemeopathy First தரப்பிலிருந்து இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் செய்யப்பட்ட பொதுத் தொண்டுகள் படங்கள் மூலமாக காட்டப்பட்டது.

இவ்வாறே Hemeopathy First இந்தியாவின் தரப்பிலிருந்து மனித இனத்திற்கு அது செய்து வரும் தொண்டுகளை எடுத்துக் காட்டுகின்ற ஒரு சிறப்பு குறும்படமும் காட்டப்பட்டது. இவ்வாறே Hemeopathy First இந்தியா தரப்பிலிருந்து தயார் செய்யப்பட்ட சில பொருள்கள் உதாரணமாக Key Chain மற்றும் Coffee ஆரப போன்ற பொருள்களும் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தன.

காதியான் ஆண்டு மாநாட்டின்போது இந்த கண்காட்சி 22 டிசம்பர் 2018 முதல் 4 ஜனவரி 2019 வரை நீடித்திருந்தது. ஏறக்குறைய 6000 முதல் 7000 பேர் இந்த கண்காட்சியை பார்த்தனர். கண்காட்சியில் Visitor Book –ம் வைக்கப்பட்டிருந்தது. அதில் பார்வையாளர்கள் தமது கருத்துக்களையும் எழுதி இருந்தனர்.

அல்லாஹ்வின் அருளால் Hemeopathy First இந்தியாவின் இந்த கண்காட்சியும் கூட மிகவும் விரும்பப்பட்டிருக்கின்றது. Hemeopathy First இந்தியாவின் தொலைத்தூரப் பகுதிகளில் மருத்துவ முகாம்கள், இரத்த தான முகாம்கள், ஏழைகளுக்கு உதவி செய்வது, மாணவர்களுக்கு உதவி செய்வது,

தூய குடி தண்ணீருக்கான ஏற்பாட்டை செய்வது ஆகியவற்றை தவிர இயற்கைச் சீற்றங்களின்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணத்திற்கு தேவையானவற்றை எட்ட வைப்பதிலும் இந்த அமைப்பு துரிதமாக செயல்படுகின்ற நல்வாய்ப்பைப் பெற்று வருகின்றது. காதியான் ஆண்டு மாநாட்டின் 2018 போது மாநாட்டுத் திடலின் வளாகத்திலும் கூட Hemeopathy First இந்தியாவின் ஓர் அறிமுக ஸ்டால் அமைக்கப்பட்டிருந்தது. இதனை 4000 பேர் பார்வையிட்டனர்.

## M.T.A – விலிருந்து اسمعوا صوت السماء என்ற அரபி நேரலை நிகழ்ச்சி

ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தில் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 19 முதல் 21 டிசம்பர் வரை அரபி நிகழ்ச்சியான "اسمعوا صوت السماء جاء المسيح جاء الامسيح" (மஸீஹ் வந்து விட்டார். மஸீஹ் வந்து விட்டார். வானத்தின் ஓசையைக் கேளுங்கள்) என்ற அரபி நிகழ்ச்சி M.T.A இன்டர்நேஷனல் காதியான் ஸ்டுடியோவிலிருந்து நேரலையில் ஒளிபரப்பானது. அல்ஹம்துலில்லாஹ்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக அரபு நாட்டிலிருந்து விருந்தினர்கள் காதியான் வந்திருந்தனர். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள் தொடர்பாக கருத்துக்களைத் தெரிவித்தனர். இந்த நிகழ்ச்சியை அரபு நாட்டிலுள்ளவர்களும் அதிகமானோர் பார்த்தனர்.

## The Messiah of the Age என்ற பெயரில் ஆப்பிரிக்காவிற்கான நேரலை நிகழ்ச்சி

இவ்வாறே 2019 ஆம் ஆண்டு 3 முதல் 5 ஆம் தேதி வரை அல்லாஹ்வின் அருளால் M.T.A இன்டர்நேஷனலின் காதியான் ஸ்டுடியோவிலிருந்து The Messiah of the Age என்ற பெயரில் ஆப்பிரிக்காவிற்கான நேரலை நிகழ்ச்சி ஒளிபரப்பானது. நிகழ்ச்சி ஒரு மணி நேரம் ஒளிப்பரப்பானது. நிகழ்ச்சி ஆங்கில மொழியில் இருந்தது. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக கண்ணியத்திற்குரிய விருந்தினர்கள் ஆப்ரிக்காவிலிருந் காதியான் வருகை தந்திருந்தனர்.

மூன்று நாட்கள் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் இளமைப் பருவம் மற்றும் வாழ்க்கை தொடர்பாக பல்வேறு தலைப்புகளிலும், அன்னாரது வாதம் தொடர்பாகவும் எடுத்தக் கூறப்பட்டது.

மேலும் ஆண்டு மாநாடு பற்றிய அறிமுகம், அதன் வரலாற்று பின்னணி, காதியான் தாருல் அமானின் அருளுக்குரிய இடங்களில் வெளிப்பட்ட ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள் மற்றும் அஹ்மதிய்யா கிலாஃபத்தின் அருள்கள், ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹின் அருளுக்குரிய கிலாஃபத் காலக்கட்டத்தில் உலகில் அமைதியை நிலைநாட்டுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட் முயற்சிகள் தொடர்பாகவும் எடுத்தக் கூறப்பட்டது. இந்நிகழ்ச்சிகளுக்கிடையே கீழ்க்காணும் Short Documentries (சிறிய குறும்படங்கள்) காட்டப்பட்டன.

காதியானிலுள்ள புனித இடங்கள் பற்றிய சுருக்கமான அறிமுகம், காதியான் ஆண்டு மாநாட்டின் ஏற்பாடுகள் மற்றும் துறைகள், காதியான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்ட ஆப்ரிக்காவைச் சார்ந்தவர்களின் நற்தாக்கங்கள் மற்றும் இவை தவிர ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தூய வாழ்வில் நடைபெற்ற சம்பவங்கள் நேர்காணல் நிகழ்ச்சியின் வாயிலாக எடுத்துக் கூறப்பட்டது.

புதிதாக ஏற்றுக் கொண்ட சிலர் தாம் அஹ்மதிய்யத்தை ஏற்று கொண்டது பற்றி கூறிய விஷயங்கள் உள்ள Recording ஒளிபரப்பப்பட்டது. உண்மையான இஸ்லாமிய கிலாஃபத் தொடர்பாக அறிமுகம் செய்யப்பட்டிருந்த வீடியோ காட்சி காட்டப்பட்டது. அஹ்மதிய்யா கிலாஃபத்தின் அருள்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உலகளாவிய முன்னேற்றம் தொடர்பாகவும் எடுத்துக் கூறப்பட்டது. பெருமானார் (ஸல்) அவர்களைப் பற்றி எழுதப்பட்ட கஸீதாக்களும் காட்டப்பட்டது. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பல்வேறு நாடுகளிலிருந்து தொலைபேசி அழைப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

அல்லாஹ்வின் அருளால் ஆப்பிரிக்க ஜமாஅத் சகோதரர்களிடம் இந்த நிகழ்ச்சியானது வழக்கத்திற்கு மாற்றமாக பெரும் வரவேற்பைப் பெற்றது. குறிப்பாக காதியானிலிருந்து நேரடியாக நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டதன் காரணமாக மக்கள் இந்த நிகழ்ச்சியை மிகவும் விரும்பினர்.

### அச்சகங்கள் மற்றும் ஊடகங்கள்

2018 ஆம் ஆண்டு காதியான் ஆண்டு மாநாட்டின் மூன்று நாட்களிலும் அச்சக மற்றும் மின்னணு ஊடகங்கள் மாநாட்டை முழுமையாக கவரேஜ் செய்திருந்தது. பட்டாலா, அமிர்தசரஸ், குர்தாஸ்பூர், ஜலந்தர், சண்டிகர் மற்றும் இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்து மின்னணு மற்றும் அச்சக ஊடகங்களின் பிரதிநிதிகள் ஆண்டு மாநாட்டின் மூன்று நாட்களிலும் கவரேஜிற்காக வருகை தந்திருந்தனர்.

அமைதி தொடர்பாக ஹுஸூர் அவர்கள் மேற்கொண்டு வருகின்ற முயற்சிகள் தொடர்பாக அன்னார் எடுத்துக் கூறிய கூற்றுகள் எடுத்தக் கூறப்பட்டன.

அல்லாஹ்வின் அருளால் பல்வேறு மின்னணு ஊடகங்களைச் சேர்ந்த 56 பிரதிநிதிகள் காதியான் வந்திருந்தனர். ஆண்டு மாநாடு தொடர்பாக இந்தியாவிலுள்ள 6 பல்வேறு மாநிலங்களில் 25 பத்திரிகையில் மொத்தம் 52 செய்திகள் வெளிவந்தன.

2018 ஆம் ஆண்டு காதியான் ஆண்டு மாநாட்டைக் குறித்து 11 டிவி சேனல்ஸ் செய்தியை ஒளிபரப்பியது. இதன் மொத்த கால அளவு 1 மணி நேரம் 57 நிமிடங்கள் ஆகும். இது தவிர ஆண்டு மாநாட்டின் செய்திகள் 5 பல்வேறு இணைய தளங்களிலும் வெளியிடப்பட்டது. சோஷியல் மீடியாவில் 118 பதிவுகளும் ஆண்டு மாநாடு தொடர்பாக பதியப்பட்டது. அல்லாஹ் கலப்பற்ற தூய உள்ளத்துடனும், நன்றியுணர்வுடனும் தொண்டு செய்த அனைவரையும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது துஆக்களுக்கு வாரிசாக்குவானாக. ஆமீன். (முடிவுற்றது)


*நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்*

தினந்தோறும் காலை 9.00 மணியிலிருந்து 11.00 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

***தொலைபேசி எண்: 1800 425 40000***

இந்த **TOLL FREE** எண்ணில் ஃபோன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.


**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்கள் 18 மே 2018 அன்று ஆற்றிய குத்பா ஜுமுஆ பேருரையிலிருந்து...**

நாம் தீமையிலிருந்து தப்பிக்கவில்லை எனில், அந்த தீமைகள் நமது இருப்பின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன அல்லது மற்றவர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன எனில் அதனை விடுவதன் மூலமே நோன்பின் நோக்கம் நிறைவேறும். நாம் அவற்றை விடவில்லை என்றால் நோன்பின் நோக்கம் நிறைவேறாது. இதுவே தக்வா (இறையச்சம்) ஆகும்

**ஃபைஸல் ஹமீது இலாஹி**
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

# "சகிப்புத்தன்மை" சமூக வாழ்வில் இதன் முக்கியத்துவம்

ஜுனைத் அஹ்மது வரய்ச், பாகிஸ்தான்

தனி நபர்களின் கூட்டத்தால் சமூகம் உருவாகின்றது. அவர்கள் மனிதன் என்னும் முறையில் மாறுபட்ட இயல்புகளைக் கொண்டிருக்கின்றனர்.

நாம் எல்லாரும் தனிப்பட்ட குணாதிசயங்களையும், சிறப்பு அம்சங்களையும் பெற்றுள்ளோம். அவையே மற்றவர்களிடமிருந்து நம்மை வேறுபடுத்திக் காட்டுகின்றன. அந்த குண இயல்புகள் அதன் மேன்மை ஆகியவை சமூக முன்னேற்றத்திற்கான அடிப்படை விஷயங்களாகும். உண்மையில் இவை பற்று, வாய்மை, அன்பு, நன்றியுடைமை எதுவாக இருந்தாலும் இவை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சிறப்புக்குரிய அம்சங்களாகும்.

சகிப்புத்தன்மை என்பது சமூகத்தை நிலைநிற்கச் செய்யும் ஒரு மகத்தான நல்லியல்பாகும். இன்றைய உலகம் மிகவும் குறுகலானதாக ஆகிவிட்டது. உலகமயமாக்கல் உலகம் முழுவதும் எல்லைகளை மங்கச் செய்து விட்டது. பல்வேறு நாடுகளின் கலாச்சாரம், மத வழிவாடு, வ்ாழ்வியல் முறைகளைக் கொண்ட மக்கள் ஒன்றாகப் பணியாற்றுகின்றனர். முந்தைய காலங்களைவிட அருகில் வசிக்கின்றனர்.

உலகமயமாக்கல் – வருகின்ற போது வெவ்வேறு சூழல், பண்பாடு, மத நம்பிக்கை கொண்ட மக்கள் ஒன்றாக வசிக்கின்றனர். எங்கெல்லாம் உலகம் பலதரப்பட்ட கலாச்சாரத்தைக் கொண்டதாக, முன்பு இருந்ததை விட முற்றிலும் மாறுபட்டதாக ஆகிவிடுமோ அங்கு சகிப்புத்தன்மையை, ஒருமைப்பாட்டை நிலைநாட்டுவதற்கு ஒருவருக்கொருவர் அன்பு, நேசம் பாராட்டுவதும் மிக அவசியமானதும் இன்றியமையாததுமாகும்.

எடுத்துக்காட்டாக, மத நம்பிக்கை குறித்து சற்றே ஆராய்வோம். மார்க்க விஷயத்தில் சகிப்புத்தன்மை மிகவும் அவசியமானதாகும். எப்படி மக்கள் வழிபாடு செய்கின்றனர் என்பது தனிப்பட்ட விஷயமாகும். ஒரு சிலர் ஒரு குறிப்பிட்ட மனிதரின் மார்க்க உணர்வுகளைக் காயப்படுத்துகின்ற போது உடனே அங்கு கடும் வாய்ச்சண்டை தோன்றி விடுகின்றது. ஒவ்வொருவருக்கும் அவர் விரும்பும் மார்க்கத்தை கடைபிடிக்க உரிமை உண்டு. மக்கள் மத்தியில் சகிப்புத்தன்மை அதிமாக இருந்தால் சரியான மார்க்கத்தைப் பின்பற்றுபவர்கள் யார் என்னும் சண்டைகள் குறைவாகவே இருக்கும்.

இஸ்லாமிய போதனைகளிலிருந்து மார்க்க சுதந்திரம், சகிப்புத்தன்மை குறித்து விளக்கமாக எடுத்துக் காட்டுவது பொருத்தமானதாக இருக்கும்.

புனித திருக்குர்ஆன் "மார்க்கம்" என்பது ஒவ்வொரு மனிதனின் மனசாட்சி சம்பந்தப்பட்டது என்று கூறுகிறது எனவே மார்க்க விஷயத்தில் எவ்வித பலவந்தமும் வற்புறுத்தலும் இருக்கக்கூடாது **(2:256)** என்று கூறுகிறது.

இப்போதனை காகிதத்தை அழகுபடுத்தவோ அல்லது உரையாற்றும் மேடையை அலங்கரிப்பதற்கோ அல்ல. மாறாக, இப்போதனையானது மிகவும் நேர்மையுடன் செயல்படுத்தப்படுகிறது.

இஸ்லாத்தில் முதன்முதலான உடன்படிக்கை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு இடம்பெயர்ந்து சென்ற பின் அங்குள்ள யூத மக்களுடன் நிகழ்ந்தது. இந்த உடன்படிக்கையின் அடிப்படையே மத சுதந்திரத்தையும், சகிப்புத்தன்மையையும் கொண்டதாக இருந்தது. பனூ நதீர் கோத்திரத்தைச் சேர்ந்தவர்களுக்கு அவர்களின் நம்பிக்கைத் துரோகம் மற்றும் நாட்டிற்கு எதிரான வஞ்சகச் செயலின் காரணமாக மதீனாவை விட்டு நாடு கடத்தப்பட வேண்டும் என்ற தண்டனை வழங்கப்பட்ட போது, அவர்கள் தங்களுடன் அன்ஸார் (மதீனாவைச் சார்ந்த ஆரம்ப கால முஸ்லிம்கள்) மூலமாக பிறந்த, ஆனால் அன்ஸாரின் சபதத்தால் யூத மதத்திற்கு மாறியிருந்த குழந்தைகளையும் கூட்டிச் செல்லத் திட்டமிட்டிருந்தார்கள்.

அன்ஸார்கள் அவர்களை மதீனாவில் தடுத்து வைக்க விரும்பினர். இந்த விவகாரம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னிலைக்கு வந்த போது அவர்கள், மார்க்கம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் எவ்வித கண்டிப்பும் இருக்கக்கூடாது என்று அன்ஸாருக்கு எதிராக தீர்ப்பு வழங்கி பனூ நதீர் கோத்திரத்தைச் சார்ந்தவர்களுக்கு அக்குழந்தைகளை அழைத்துச் செல்வதற்கான அனுமதியை வழங்கினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்நாளில் கைபரைச் சார்ந்த யூதர்களும், நஜ்ரானைச் சார்ந்த கிறிஸ்தவர்களும் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்த போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு முழுமையான மார்க்க சுதந்திரத்தை வழங்கி அதனைப் பின்பற்றவும், செயலாற்றவும் அனுமதி வழங்கினார்கள் என்று நாம் பார்க்கின்றோம்.

உண்மையில், ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. மதீனாவுக்கு நஜ்ரானைச் சார்ந்த கிறிஸ்தவர்கள் வந்த போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மஸ்ஜிது நபவியில் அந்த கிறித்தவர்களுக்கு அவர்கள் தங்கள் மத நம்பிக்கையின்படி வழிபட அனுமதியை வழங்கினார்கள். சில நபித்தோழர்கள் இதனைத் தடுக்க முன் வந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களைத் தடுத்தார்கள். இவ்வாறு வந்திருந்த கிறிஸ்தவர்கள் மஸ்ஜிது நபவியின் மேற்கு திசையை நோக்கித் தமது வழிபாட்டைச் செய்தார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைப் பற்றி ஓர் அறிவிப்பில் வருகிறது. அவர்கள் எப்போதெல்லாம் முஸ்லிம் படையை போருக்காக அனுப்புவார்களோ அப்போது அந்த படைத்தளபதியிடம், தமது எஜமானர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றியவாறு முஸ்லிம்கள் அல்லாதவர்களின் வழிபாட்டுத் தலங்களுக்கும், முதிய மார்க்க அறிஞர்களுக்கும் உரிய கண்ணியமளிக்க வேண்டும் என்று அறிவுரை கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் சிரியா வெற்றி கொள்ளப்பட்ட போது அங்கு வாழ்ந்த முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட உடன்படிக்கையின் ஒரு பிரசித்தி பெற்ற அம்சம் என்னவென்றால், மார்க்க சுதந்திரமும், சகிப்புத்தன்மையுமே ஆகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மார்க்கத்தில் சகிப்புத்தன்மை இருக்க வேண்டும் என்று மட்டும் கூறவில்லை. மாறாக, சகிப்புத்தன்மை உயர்தரத்தில் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்கள்.

*(இன்ஷா அல்லாஹ் தொடரும்...)*

அல் ஹகம் ஆங்கில பதிப்பு 13 ஏப்ரல் 2018
தமிழாக்கம்: செய்யது அன்வர் அஹ்மது, தூத்துக்குடி

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 23 May 2019 Issue No. 21

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# அருளுக்குரிய ரமலானுடன் தஹ்ரீகே ஜதீதிற்கு இருக்கும் ஆழமான தொடர்பு

தஹ்ரீகே ஜதீதின் தோற்றுனர் ஸய்யிதுனா ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அருளுக்குரிய ரமலானுடன் தஹ்ரீகே ஜதீதிற்கு இருக்கும் ஆழமான தொடர்பு பற்றி இவ்வாறு கூறினார்கள்:

"நீங்கள் ரமலானிலிருந்து பயன் பெற விரும்பினால் தஹ்ரீகே ஜதீதிற்கேற்ப செயல்படுங்கள். தஹ்ரீகே ஜதீதிலிருந்து பயன் பெற விரும்பினால் நோன்புகளிலிருந்து சரியான பயனைப் பெற வேண்டும். தஹ்ரீகே ஜதீது என்பது எளிமையான வாழ்க்கையை வாழ்வதும் உழைப்புடனும் கஷ்டங்களைச் சகிப்பதும் தியாகம் செய்வதற்கு தன்னைத்தானே பழக்கப்படுத்திக் கொள்வதும் ஆகும். இந்தப் பாடத்தை உங்களுக்கு கற்றுக் கொடுப்பதற்காகவே ரமலான் வந்திருக்கின்றது. எனவே, எந்த நோக்கத்திற்காக ரமலான் வந்துள்ளதோ, அந்த நோக்கத்தைப் பெறுவதற்காக முயற்சி செய்யுங்கள்..... ஒவ்வொரு நபரும் அவரது ரமலான் தஹ்ரீகே ஜதீதுடையதாகவும் அவரது தஹ்ரீகே ஜதீது ரமலானுடையதாகவும் இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். ரமலான் நமது நஃப்ஸை அழிக்கக் கூடியதாகவும் தஹ்ரீகே ஜதீது நமது ஆன்மாவிற்கு புத்துணர்வூட்டக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

எனவே, நான் ரமலானிலிருந்து பயனடையுங்கள் என்று கூறும்போது நீங்கள் தஹ்ரீகே ஜதீதின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் ரமலானின் ஒளியில் புரிந்து கொள்ளுங்கள் என்பதையே உண்மையில் நான் உங்களுக்குப் புரிய வைத்துள்ளேன். தஹ்ரீகே ஜதீதின் பக்கம் கவனம் செலுத்துங்கள் என்று நான் கூறும்போது வேறு சொற்களில் நான் உங்களுக்கு நீங்கள் எல்லா நிலையிலும் ரமலானின் நிலைமையை உங்களிடம் ஏற்படுத்துங்கள் என்றே கூறுகின்றேன். சரியான தியாகத்தை தொடர்ந்து செய்கின்ற பழக்கத்தை உங்களிடம் ஏற்படுத்திக் கொள்ளுங்கள். எந்த ரமலான் உண்மையான தியாகம் இல்லாமல் கடந்து சென்று விடுகின்றதோ அது ரமலான் அல்ல. மேலும் எந்த தஹ்ரீகே ஜதீது ஆன்மாவிற்கு புத்துணர்ச்சியூட்டாமல் கடந்து சென்று விடுகின்றதோ அது தஹ்ரீகே ஜதீது அல்ல."

(ஜூமுஆ குத்பா 4 நவம்பர் 1938)

இது தொடர்பாக 11 நவம்பர் 1938 அன்று நிகழ்த்திய குத்பா பேருரையின் இறுதியில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஜமாஅத்திடம் தஹ்ரீகே ஜதீதிற்காக சந்தா செலுத்துபவருக்கு குறிப்பாக துஆ செய்யுமாறு வேண்டியவாறு இவ்வாறு கூறினார்கள்:

"ரமலானின் இறுதிப் பத்து நாட்கள் வரவிருக்கின்றது. இந்த நாட்களை தஹ்ரீகே ஜதீது தொடர்பாக செய்யப்பட்டுள்ள கடந்த கால தியாகங்களுக்காக நன்றி செலுத்துவதற்கும் இனி வருங்காலத்தில் ஆற்றலைப் பெறுவதற்காகவும் செலவிடுங்கள். எவர்களுக்கு கடந்த வருடங்களில் தியாகம் செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்திருக்கின்றதோ அவர் இதற்காக அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துங்கள். துஆ செய்கின்ற ஒவ்வொருவரும் அல்லாஹ்விடம் தியாகம் செய்கின்ற ஒவ்வொருவருக்காகவும் துஆ செய்ய வேண்டும். அதாவது, மார்க்கத்தின் எழுச்சிக்காகவும் இயக்கத்தின் வலிமைக்காகவும் செய்த தியாகத்தின் விளைவாக அல்லாஹ் அவர் மீது தனது அருளையும் கருணையையும் இறக்க வேண்டும். எத்தகைய கலப்பற்ற மனத்தூய்மையுடனும் அன்புடனும் அவர் இறைவனின் வழியில் தியாகம் செய்தாரோ அதற்கேற்ப அவர் மீது தனது அன்பையும் அருள்களையும் இறக்குவாயாக! ஆமீன் என்று துஆ செய்ய வேண்டும்."

(அல் ஃபஸ்ல் 15 நவம்பர் 1938, பக்கம் 4)

29 நவம்பர் 1938 ஆம் ஆண்டு காதியானிலிருந்து வெளிவந்த அல்ஃபஸல் தினப் பத்திரிகையில் வெளிவந்துள்ள அறிவிப்பிற்கேற்ப ஜமாஅத்திலுள்ள தூய உள்ளம் கொண்டவர்கள் ஆரம்பத்திலிருந்தே இதனை வழக்கமாகக் கொண்டிருந்தனர். அதாவது அவர்கள் எப்போதும் ரமலானின் முதல் பதினைந்து நாட்களுக்குள் தஹ்ரீகே ஜதீது சந்தாவிற்காக அவர்கள் செய்திருந்த வாக்குறுதிகளை நூறு சதவிகிதம் முழுமையாகச் செலுத்தியவாறு அல்லாஹ்வின் அருள்களையும் பரக்கத்துகளையும் ஈர்ப்பதற்கு முயற்சி செய்கின்றனர்.

எனவே, தஹ்ரீகே ஜதீதிற்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற அனைவரிடமும் அவர்கள் தங்களது மகத்தான ஜமாஅத்தின் மரபுகளை நிலைத்து நிற்கும்படி செய்தவாறு அருளுக்குரிய ரமலானின் 20 –வது நாள் அதாவது மே 26 ஆம் தேதிக்குள் தாங்கள் செலுத்த வேண்டிய தொகையை முழுமையாகச் செலுத்தி ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் ஏற்றுக் கொள்ளப்படும் துஆக்களிலிருந்து முழுமையான பங்கைப் பெறும் நற்பாக்கியத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அல்லாஹ் நம் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. ஆமீன்.
*(வகீலுல் மால் தஹ்ரீகே ஜதீது, காதியான்)*

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஸ்தாபகர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:
"இன்று உலகிலுள்ள மார்க்கங்களில் திருக்குர்ஆன் கொண்டு வந்துள்ள மார்க்கம் மட்டுமே உண்மையான மார்க்கமாகவும், இறை திருப்தியை பெற்ற மார்க்கமாகவும் திகழ்கிறது என்ற தூதுச் செய்தியை... முழு மனித சமுதாயத்திற்கும் எட்ட வைப்பதற்காக மட்டுமே நான் அனுப்பப்பட்டுள்ளேன்"
(மல்ஃபூஸாத் தொகுதி 2, பக்கம் 132; 1985 –ஆம் ஆண்டு பதிப்பு – இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad